
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 15 ஞாயிற்றுக்கிழமை (31.07.2011) பக்கங்கள் 16 ஓசை - 305



ஏன் தெரியுமா? (11)



யாழ். பல்கலையின் புகழ் பரப்பியவர் (04)



யாழில் 'றக்பி' (06)

எங்கள் மீது தனிப்பட்ட தாக்குதல் (08)



# சனல் - 4 போலியானது

# ஆஸியில் கண்டனப் பேரணி




(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது நடைபெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்களை சித்தரித்துக் காட்டும் சனல் - 4 போலி ஆவணப் படத் தொகுப்புக்கு எதிராக அவுஸ்திரேலியாவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மெல்போன் நகரில் நேற்றுக் காலை (15 ஆம் பக்கம் பார்க்க)

## உதயன் நிறுவனத்துக்கு பாதுகாப்பு கோரிக்கையை நிராகரித்தது பொலிஸ்

(யாழ்ப்பாணம்)

உதயன் நாளேட்டின் செய்தி ஆசிரியர் குகநாதன், இனந்தெரியாத ஆயுததாரிகளால் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து குறித்த பத்திரிகைக் காரியாலயத்தின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை பொலிஸாரால் நிராகரிக்கப்பட்டுள்ளது என சரவணபவன் எம்.பி. ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சீ.டீ.விக்கிரமரட்னவுடனான சந்திப்பொன்று நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். பொலிஸ் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, பத்திரிகை நிறுவனத்துக்கும் அதன் ஊழியர்களுக்கும் உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகவும், இதனால் நிறுவனத்தின் பாதுகாப்பை அதிகரித்து ஊழியவர்களின் உயிருக்கு உத்தரவாதம் வழங்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தார்.

2006 ஆம் ஆண்டு முதல் 2 பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபடுவதால் மேலதிக பொலிஸார் நியமிக்கப்படவில்லையெனத் தெரியவருகிறது.

## நீதிமன்றம் செல்ல கூட்டமைப்பு தயாராகிறதாம்

(கொழும்பு)

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்துக்கான நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் பட்சத்தில் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்வது பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆலோசித்து வருவதாக அக்கட்சியின் யாழ்.மாவட்ட எம்.பி. மாவை சேனாதிராஜா தெரிவித்தார். அவர் இது பற்றி மேலும் விளக்கமளிக்கையில்,

இந்த நடவடிக்கையை நாம் கடுமையாக எதிர்க்கிறோம். மக்களில் பலரும் இன்னும் இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்கின்றனர். (15 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தகால உரிமை மீறல்கள் அரசின் கவனம் திரும்ப வேண்டும்

### நிருபமா ராவ் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குறித்து இலங்கை அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார்.

சனல் - 4 ஆவணப்படத்தின் அடிப்படையில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது யுத்த வலயத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

எனவே இந்த விவகாரத்தில் இலங்கை அரசு நிலைமையை உன்னிப்பாக அவதானித்து அதற்கேற்ற வகையில் பொருத்தமான நடவடிக்கைகளில் அரசு இறங்க வேண்டும் என்றும் நிருபமா ராவ் மேலும் தெரிவித்துள்ளார்.



யுத்த காலத்தின் போது வடக்கில் மட்டுமன்றி தெற்கிலும் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக நிருபமா ராவ் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இலங்கையில் சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்தார்.

## பதவிப் போட்டியில் சிக்கித் தவிக்கிறது வல்வெட்டித்துறை நகரசபை

### கூட்டமைப்புக்குள் குழப்பம்



(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகரசபைக்கு யாரைத் தலைவராக நியமிப்பது என்ற விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பெரும் குழப்ப நிலை தோன்றியுள்ளது.

இந்த விடயம் குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராஜாவுக்கு தொலைநகல் மூலம் அவசர கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 28.07.2011 (15 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைக்கு ஐ.நா. கோரிக்கை

(கொழும்பு)

சடலமாக மீட்கப்பட்டுள்ள மனித உரிமை நடவடிக்கையாளரின் மரணம் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

புத்தளத்தை சேர்ந்த பட்டானி ராசிக் என்ற இந்த மனித உரிமை நடவடிக்கையாளர், கடந்த 2010 ஆம் ஆண்டு பொலநறுவையில் வைத்து காணாமல் போனார்.

இந்தநிலையில் அவர் மட்டக்களப்பு ஓட்டமாவடியில் உள்ள குடியிருப்பு ஒன்றின் புதைகுழியில் இருந்து நேற்று முன்தினம் சடலமாக பொலிஸாரால் மீட்கப்பட்டார்.

## பொலிஸ் முறைப்பாட்டுப் பெட்டி பாடசாலைகளில் பொருத்த ஏற்பாடு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகள் தோறும் பொலிஸ் முறைப்பாட்டுப் பெட்டிகள் பொருத்தப்படவுள்ளது.

பொலிஸாருக்குத் தெரிவிக்க வேண்டிய முறைப்பாடுகளை மாணவர்கள் குறிப்பிட்ட முறைப்பாட்டுப் பெட்டியில் போட்டுக் கொள்வதற்கு வசதியாகவே இந்தப் புதிய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக இம்மாவட்டத்துக்கான பொலிஸ் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

அத்துடன் பாடசாலை சமூகத்தினர், மாணவர்கள் மத்தியில் நல்ல குழுக்களை உருவாக்கி அதன் மூலம் நல்ல சமூகத்தை உருவாக்கவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி நீல்தலுவத்த மேலும் தெரிவித்தார்.

கடந்த 26 ஆம் திகதி கிளிநொச்சி சென். தெரேசா மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற மாணவர்கள், ஆசிரியர்களுக்கான பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மாணவர்கள் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடித்துச் செல்ல வேண்டும். தெரியாத நபர்களுடன் பழகவோ அல்லது அவர்களுடன் (15 ஆம் பக்கம் பார்க்க)

## கடன் பெற அரசு முயற்சி

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் உட்பட நாட்டின் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து மேலதிக கடன் தொகை ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு அரசு முயற்சிகளைச் செய்து வருகிறது.

சுமார் 6.5 பில்லியன் ரூபாய்கள் இவ்வாறு கடன் கோரப்படவுள்ளன. உட்கட்டுமான அபிவிருத்திகளுக்காக இந்த தொகை கோரப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஆகஸ்ட் 3, 4 ஆம் திகதிகளில் (15 ஆம் பக்கம் பார்க்க)

# சங்கிலியன் சிலை புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் நேரடிப் பார்வை





(யாழ்ப்பாணம்)

நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் புனரமைக்கப்பட்டு வருகின்ற சங்கிலியன் சிலையினை நேற்றைய தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டதுடன், சிலை அமையப் பெற வேண்டிய விதம் குறித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாறுத்துறைப் பேராசிரியர் ப.புஷ்பரட்ணத்துடன் ஆராய்ந்துள்ளார். இச் சந்திப்பின் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் ஈ.பி.டி.பி யாழ்மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஆகியோர்களும் கலந்து கொண்டனர்.

மாநகர சபைக்குட்பட்ட யாழ்.நகரின் பல்வேறு பகுதிகளுக்கும் அன்றைய தினம் நேரடியாக விஜயம் மேற்கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அப்பகுதிகளின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள மீன்சந்தை பழக்கடைத் தொகுதி கால்நடைகளின் கொல்களம், தனியார் பேருந்து நிலையம் உள்ளிட்டவற்றின் சுத்தம் தொடர்பில் சுகாதாரம் தொடர்பில் நேரடியாக ஆராய்ந்தார்.

அவ்விடங்களில் சுத்தத்தைப் பேணுவது தொடர்பில் அமைச்சர் அவர்களால் முக்கிய பணிப்புரைகள் யாழ்.மாநகர முதல்வருக்கு வழங்கப்பட்டது.

குறிப்பாக மீன்சந்தை, கால்நடைகளின் கொல்களம் ஆகியவற்றின் சுகாதாரச் சீர்கேட்டால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தொடர்பாகவும் அவற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பது தொடர்பாகவும் துறைசார்ந்தவர்கள் மிகக் கவனம் எடுக்க வேண்டுமெனவும் தவறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இதேபோன்று இப்பகுதியிலுள்ள பழக்கடைத் தொகுதி மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு உள்ளிட்ட தூர இடங்களுக்கு செல்லும் பேருந்து தரிப்பிடத்தின் சுத்தம் தொடர்பிலும் நகரின் ஏனைய இடங்களின் சுத்தம் தொடர்பிலும் துறைசார்ந்த வர்களுடன் அமைச்சர் அவர்கள் கலந்துரையாடலை மேற்கொண்டதுடன் நகரின் சுத்தம், சுகாதாரம் தொடர்பில் யாழ்.மாநகர சபைக்கு சகலரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

## வெதுப்பகப் பொருட்கள் விலை அதிகரிக்கலாம்



வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் மீண்டும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. வெதுப்பக உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற, உப பொருட்களுக்கான விலைகள் அதிகரித்துள்ளமையே இதற்கான காரணம் என கூறப்படுகிறது. வெதுப்பக உரிமையாளரர்கள் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் இதுபற்றிக் குறிப்பிடுகையில் வெதுப்பக உற்பத்திகளின் துணைப் பொருட்களுக்கான வரிகளைக் குறைக்கவேண்டிய அவசியம் இருப்பதாக குறிப்பிட்டார். அவ்வாறு குறைக்கப்படாத பட்சத்தில், வெதுப்பக உற்பத்திகளான பாண் உள்ளிட்ட பொருட்களுக்களின் விலைகள் அதிகரிக்கலாம் என அவர் எச்சரித்துள்ளார்.

# உபகரணம் கொள்வனவு களம் இறங்குகிறது ஜெய்க்கா

(குருநகர்)

யாழ் கடற்தொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியின் புதிய அலுவலகத்திற்கான உபகரணங்கள் மற்றும் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்குக் கொழும்பு தேசிய கடற்தொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியின் பிரதம பணிப்பாளர் நாயகம், ஜப்பான் ஜெய்க்கா நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

அதனை அடுத்து இந்நிறுவன பொறியியலாளர் ஆய்க்காவா மற்றும் கல்லூரிக் கட்டட பொறியியலாளர்களுடன் யாழ்.கல்லூரி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை உபகரணங்களைப் பார்வையிட்டுள்ளார்.

அத்துடன் நீர்கொழும்பு, நீல்மறாயின் படகு கட்டும் நிறுவனத்திற்குச் சென்று புதிய கல்லூரிக்குப் பயிற்சி நெறிகளை மேற்கொள்ளவிருக்கும் படகைப் பார்வையிட்டதுடன் அதனில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்களையும் உதவிப் பணிப்பாளர் கோரிக்கைக்கு அமைவாக ஜெய்க்கா நிறுவனம் செய்வித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இயந்திரம், கப்பலோட்டத்திற்கு பயன்படுத்தும் உபகரணங்கள் ஆகியவற்றையும் இரண்டு தினங்கள் பார்வையிட்டுக் கொள்வனவு செய்ய ஜெய்க்கா நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

## அல்வாயில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

அல்வாய் வேலிவந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் கொடியேற்றத்திருவிழா நேற்று இடம் பெற்றபோது மூன்று பெண்களின் தங்கச் சங்கிலிகள் திருடப்பட்டுள்ளன.

ஆலயத்தில் பெண்கள் மட்டுமே குழுமிநின்ற பகுதியிலேயே இத்திருட்டு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து ஆலயத்தில் தொடர்ந்து இடம்பெறும் திருவிழாக்களின்போது திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த ஆலய நிர்வாகத்தினர் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

இதற்காகப் பொலிஸாரின் உதவி நாடப்பட்டுள்ளதுடன் பாடசாலைகளில் இருந்து சாரணர்களின் உதவிகளைப் பெறவும் ஆலய நிர்வாகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. (100)

## கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் பொன் விழாவை முன்னிட்டு கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையினால் யாழ்மாவட்டத்திலுள்ள மூத்த வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 11 மணிக்குப் பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்தக் கூட்டம் நாளை திங்கட்கிழமை 12.30 மணிக்குத் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (11)

## வீதி விபத்து

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் இருபாலை வீதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

கோண்டாவில் சந்தியை நோக்கி வந்த சிறிய-வான் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்கு உள்ளாகியது.

இவ்விபத்தில் சிக்கி துவிச்சக்கர வண்டியில் சென்ற இளைய தம்பி வாசன் என்பவரே படுகாயம் அடைந்துள்ளார்.

இவர் யாழ்.மாநகரசபையின் சுகாதார உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருகின்றார்.

இவர் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி)

## எரி காயத்துடன் இளம் பெண்

(முல்லைத்தீவு)

குக்கரில் சமைத்துக்கொண்டிருக்கும்போது குக்கர் வெடித்து எரியுண்ட நிலையில் யுவதி ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மதியம் 2 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் முத்தையன் கட்டு ஜீவநகர்ப் பகுதியைச் சேர்ந்த தெ.சிறிரஞ்சினி (வயது 20) என்பவரே குக்கர் வெடித்து எரியுண்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## விளையாட்டு விழா

(புலோலி)

புலோலி மேற்கு சதாவதானி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று மாலை 3 மணிக்கு சதாவதானி சனசமூக நிலையத் தலைவர் சி.குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமராட்சி ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன் கலந்துகொள்கிறார். (100)



யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் இடம்பெற்ற கலைநிலா அரங்கு நிகழ்வில் கல்லூரியின் மாணவி அருட்சகோதரி அனிஸ்ரடேபரேரா சங்கீத இசைக்கச்சேரியையும் மற்றும் மாணவி ஒருவர் ஓர்கன் இசை நிகழ்த்துவதையும் பிரான்ஸ் மன்றத்தின இணைப்பாளர் டேமியன் சூசி மன்றத்தின் இயங்குநர் அருள்பணி நீ.மரியசேவியர் அடிகளாரால் கௌரவிக்கப்படுவதையும் காணலம். (52)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்





மணியம் தோட்டம் மக்களாகிய நாம்
யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இல்லிடங்களை
இழந்து பல இன்னல்களை அனுபவித்து மீண்டும்
(16) வருடங்களின் பின் நாம் மீளவும் எமது கிராமத்திற்கு
மீள்குடியேற உதவிபுரிந்த பாரம்பரிய கைத்தொழில்
மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும்
எமக்குப் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய
கௌரவ யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
சில்வேஸ்த்திரி அலன்ரின் அவர்களுக்கும் யாழ்.மாவட்ட அமைப்பாளர்
கந்தசாமி கமலேந்திரன் அவர்கட்கும், மேலும் எமது கிராம
குடிநீர், மின்சாரம், வீதிகள், வீட்டுத்திட்டம், கிராம அபிவிருத்திச்
சங்கத்திற்கு நிதியுதவி பெறுவதற்கும், எமது கோரிக்கைகளை கௌரவ
அமைச்சரிடம் கையளித்து எமது கிராமம் வளர்ச்சியடைவதற்கு
முன்னின்டு உழைத்த எமது நல்லூர்ப் பிரதே ஈ.பி.டி.பி. அமைப்பாளரும்,
நல்லூாப் பிரதேச சபை உறுப்பினருமான அம்பலம் - இரவீந்திரதாசன்
அவர்களை எமது கிராம மக்கள் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்





கிராமிய அபிவிருத்திச் சங்கமும்
மணியம் தோட்டம் வாழ் மக்களும்

(R/042)

சத்தியம் என்ற தாய், ஞானம் என்ற தந்தை தர்மம் என்ற சகோதரன், கருணை என்ற நண்பன், சாந்தி என்ற மனைவி, பொறுமை என்ற புதல்வன் இவர்களே நமக்கு உகந்த உறவினர்கள் ஆவர்.

*- வாரியார்.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## நமக்குள் பகை; வேட்டையாடுவோம்!

பொது மக்களாகிய நாம் உண்மை என்று நம்புகிற சில விஷயங்களால் இறுகிப் போயிருக்கிறோம். நாம் உண்மை என்று நம்புகின்றவைக்கு அப்பாலும் உண்மைகள் இருக்கலாம் என்பதை நம்ப மறுக்கிறோம். சில விஷயங்களில் எங்களை யாரும் எளிதில் மாற்றிவிட முடியாது என்றே தோன்றுகிறது.

ஒரே அறுவை, உருப்படியான நிகழ்ச்சிகள் இல்லை, நேரத்தைக் கொலை செய்கிறார்கள் என்று திட்டியபடியே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்பது போல, "இவங்கள் ஒண்டும் செய்யப்போறேல்லை" என்று திட்டிக் கொண்டே தேர்தலிலும் வாக்குப் போட்டுக் கொண்டிருப்போம்!

முன்னேற விடாது, முட்டாள்தனமானது என்று தெரிந்தாலும் சில ரோசப்பிடிவாதங்களைத் தொடர்ந்து சாதித்துக் கொண்டிருப்போம். நடக்காது என்று பட்டறிவுக்கு நன்கு தெரிந்தவற்றின் மீதும் நம்பிக்கை வைத்து ஏமாந்து கொண்டிருப்போம்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை காய்ச்சு காய்ச்சென்று காய்ச்சுக் கொண்டிருப்பவர்கள், தாங்கள் நம்பி வந்த சில எண்ணக்கோலங்கள் பொல பொலத்துச் சிதைவதைத் தாங்கிக் கொள்ள முடியாமல்தான் தீவிர நடிப்பு நடிக்கிறார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், திரும்பத் திரும்ப மக்களை அழிக்கும் குரூரமானவர்களாகவோ அல்லது அது பற்றி அக்கறையே படாத பக்காச் சுயநலவாதிகளாகவோ அல்லது அறியாமைக் கொடுமுடிகளாகவோ தானே இருக்க முடியும்?

யதார்த்தத்தை நேருக்கு நேர் நோக்க முடியாமல் ஏன் இப்படிப் பதறித் துடித்துப் போவதாக நம் சமூகம் இருக்கிறது? தெரியவில்லை.

இன்றைய சர்வதேச ஒழுங்கிலும், பிராந்திய ஆதிக்கப் போட்டிகளின் முறைமையிலும் நமக்குத் தனிநாடு என்பது சாத்தியமே இல்லை என்று எல்லோருக்கும் விளங்குகிறது. இந்த நாட்டுக்குள் சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியரோடுதான் நாம் சேர்ந்து வாழ்ந்தாக வேண்டும் என்பதிலும் சந்தேகம் தோன்ற வாய்ப்பில்லை.

ஒரு நாட்டுக்குள் வாழ்கிற இந்தச் சமூகங்களுக்கு இடையே தானே புரிந்துணர்வும் இணக்கப்பாடும் உருவாக வேண்டும்? ஒரு தரப்பின் சந்தேகத்தை மறுதரப்பு களைந்தும், மறுதரப்பின் நியாயங்களை முதல் தரப்பு விளங்கியும் தானே ஒரு தீர்வு உருவாக முடியும்? எதற்காக இந்த மந்திரத்தில் மாங்காய் விழும் என்று துள்ளிக் குதித்துக் கொண்டேயிருக்கும் ரோதனை?

தென்னிந்தியாவிலிருந்து தமிழ் அரசர்கள் இலங்கை மீது 52 தடவைகள் படையெடுத்துள்ளதாக வரலாறு சொல்கிறது. அந்தப் பதினாலாம் நூற்றாண்டிலிருந்து வளர்ந்து வரும் அச்சம் சிங்களப் பெரும்பான்மையினர் மனதிலிருந்து களையப்படாமல், சேர்ந்து வாழும் தீர்வுக்குப் போவது எங்ஙனம்? அது போல பேரினவாதம் தமிழ் மக்களை ஒடுக்கியதும் உண்மையே.

இந்த இரு தரப்பிலும் இருக்கும் அச்சமும் விரோதமான உணர்வுகளை மேலும் மேலும் வளர்ப்பதற்குப் பேசிக் கொண்டிருப்பதா, அகற்றுவதற்கான வார்த்தைகளைப் பேசுவதா இன்றைய தேவை? உண்மையில், தீர்வும் நிம்மதியான வாழ்வும் விரும்புகிறவர்கள் மற்றவர்களைப் பற்றிய குற்றச்சாட்டுக்களைச் சொல்லிக் கொண்டிருப்பதைவிடுத்து, தம் பக்கத்திலிருந்து செய்ய வேண்டிய பொறுப்பான பகை-வெறுப்பு அகற்றும் சொற்களையல்லவா பேசுவார்கள்?

மக்களது நலனிலும் வாழ்விலும் அக்கறையும், பொறுப்பும் கொண்டிருப்பவர்கள் பிறர் தவறுகளைக் காரணமாய்ச் சொல்லிக்கொண்டிராது, தம் தரப்பு அணுகுமுறையிலேயே கவனங் கொள்வார்கள். மற்றவர்களின் அச்சத்திற்கு இடங்கொடாதிருப்பதும், நமது நியாயங்களைப் புரிய வைப்பதும் வீர வசனங்களினால் முடியாது; விவேகமான அணுகுமுறையினால் மட்டுமே முடியும்.

இல்லையெனில், கால் நோக நோகத் துள்ளிக் குதித்துக் கொண்டேயிருக்க வேண்டியதுதான்!

*- ஆசிரியர்.*

# ஊடக சுதந்திரத்தில் தலையிட பிரிட்டன் அரசாங்கம் மறுப்பு

(கொழும்பு)

ஊடக சுதந்திரத்தில் தலையீடு செய்யப் போவதில்லை என பிரித்தானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

சனல்-4 ஊடகம் பொறுப்பற்ற விதத்தில் போலியான ஆவணப்படமொன்றை தயாரித்துள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

போலியான ஆவணப் படத்தை ஒளிபரப்புச் செய்ததது குறித்த ஊடக நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். எனினும், ஊடக நிறுவனமொன்றின் சுதந்திரத்தில் தலையீடு செய்யபபோவதில்லை என இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

சனல்-4 ஊடகம் ஓர் சுதந்திர ஊடக நிறுவனம் எனவும், ஒவ்வொரு ஜனநாயக அரசாங்கமும் ஊடக சுதந்திரத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதே பிரித்தானியாவின் நிலைப்பாடாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடக நிறுவனங்கள் எவ்வாறான விடயங்களை வெளியிட வேண்டும் என்பதனை அரசாங்கம் தீர்மானிக்காது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஊடகங்களின் ஒழுக்க விதிகளும், சட்டத்தரங்களும் பேணப்படுகின்ற போதிலும், ஊடக நிறுவனங்களின் உள் விவகாரங்களில் தலையீடு செய்யப் போவதில்லை என பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

# மகேந்திரபுரம் கிராமத்தில் இந்திய அரசின் வீட்டுத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை, மகேந்திரபுரம் கிராமத்துக்கான இந்திய அரசின் வீட்டுத்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

யுத்த நடவடிக்கையினால் முதல் இருந்த வீடுகள் அனைத்தும் தரமட்டமான நிலையில் புதிய வீடு அமைப்பதற்கு கட்டடச் சிதைவுகள் அகழப்பட்டு புதிய கட்டடத்துக்கான அத்திவாரம் வெடடப்பட்டுள்ளதுடன், வீடு கட்டுவதற்கு கற்களும் பறிக்கப்பட்டு வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வெ.வேதநாயகம், செ.வின்சன், அ.செபமாலை, செ.மேரி அஞ்சலா, யோ.கியோமர், அ.மரியம்மா, ப.சூசைநாதர், பி.அந்தோனிப்பிள்ளை, பெ.அலெக்சாண்டர், ஞா.அந்தோனிப்பிள்ளை, அ.அனஸ்ரின் ஆகிய பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், முதற்கட்டமாக 11 பயனாளிகளுக்கும் வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட பின்னர், இரண்டாம் கட்டமாக எஞ்சியுள்ள 14 பயனாளிகளுக்கும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

# புனரமைக்கப்பட்ட சங்கிலிய மன்னனின் உயிரோவிய உருவச் சிலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூரைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாணம் இராசதானியை ஆட்சி செய்த கடைசி அரசனான சங்கிலி மன்னனின் புனரமைக்கப்பட்ட உயிரோவிய உருவச் சிலை எதிர்வரும் மூன்றாம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் முத்திரைச் சந்தியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு சிலையைத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் நினைவுரையை யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் நிகழ்த்துவதுடன், சிறப்புரையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ்.மாநகர சபை அழைப்பு விடுத்துள்ளது.

# வடக்கு, கிழக்கு தாய்சேய் நலனுக்கு உலக உணவுத்திட்டம் நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பகுதிகளில் தாய், சேய் நலன் மற்றும் போஷாக்கு உணவு வழங்கல் என்பவற்றுக்காக உலக உணவுத் திட்டம் 4 கோடியே 86 இலட்சத்து 24.632 அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய இந்நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான இரண்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

வடக்கில் மன்னார், வவுனியா கிளிநொச்சி மற்றும் யாழ்.மாவட்டங்களிலும் கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளிலும் நீண்டகால நிவாரண அடிப்படையிலான வேலைத் திட்டங்களுக்கென வழங்கப்படும் உலக உணவுத் திட்டத்தின் நிதி உதவியின் ஊடாக 3.71.000 பேர் நன்மையடையவுள்ளனர்.

அவசர அனர்த்த நிவாரண செயற்பாடுகளுக்கென உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் நிதியின் ஊடாக கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் வடமத்திய மாகாணத்தின் அனுராதபுரம், பொலனறுவை மாவட்டங்களில் சுமார் 5 இலட்சம் பேர் நன்மையடையவுள்ளனர்.

தாய், சேய் நலன் மற்றும் போஷாக்குணவு திட்டம் தெரிவு செய்யப்பட்ட ஆரம்ப பாடசாலை மாணவர்களின் சத்துணவு வழங்குதல் உணவுக்கான வேலை திட்டத்தை நடைமுறைப்படுத்தல் முகாம்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உலர் உணவு பெற்றுக்கொடுத்தல் போன்ற திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## முருகானந்தா வித்தியாசாலையில் "பான்ட்" அறிமுக நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முருகானந்தா வித்தியாசாலையின் 'பான்ட்' அறிமுக விழா கடந்த வெள்ளிகிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முருகானந்தா பாடசாலையின் 'பான்ட்' முன்னைய காலங்களில், விழாக்களில் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த நிலையில் போர் முடிவுற்ற பின்னர் இதுவரையில் 'பான்ட்' குழு இயங்கவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை பான்ட் அறிமுக விழா நடைபெற்றமை இக்குறையை போக்கியுள்ளது. இந்த விழாவில் கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்த நிர்வாக அதிகாரி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். பாடசாலையின் அதிபர் வரதன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. (12)

## 2 வயதுப் பெண் குழந்தை குழியில் விழுந்து மரணம்

(வடமராட்சி கிழக்கு)

உடுத்துறைப் பகுதியில் மின்கம்பம் நடுவதற்காக வெட்டப்பட்ட கிடங்கில் விழுந்து இரண்டு வயது பெண்குழந்தை உயிரிழந்த சம்பவமொன்று கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் மின்சாரம் வழங்குவதற்கு மின்கம்பங்கள் நடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்தப் பிரதேசத்தில் இதற்கென வெட்டப்பட்டிருந்த குழிக்குள் விழுந்து பெண் குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்தது.

உடுத்துறை 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கமலராஜ் வர்மிலா என்ற குழந்தையே உயிரிழந்தவராவார். (38)

# சர்வதேசத்தில் தமிழ் பாரம்பரியத்தை நிலைநாட்டியவர் பேராசிரியர் சிவத்தம்பி

## பேராசிரியர் கி. விசாகரூபன் பெருமிதம்

(தும்பளை)

யாழ். பல்கலைக்கழகத்தின் புகழை சர்வதேச ரீதியில் பரவச் செய்து தமிழ்ப் பாரம்பரியத்தை நிலைநாட்டிய பெருமை பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களையே சாரும் என யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கி. விசாகரூபன் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேராசிரியர் கா. சிவத்தம்பிக்கான அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு தலைமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஈழத்து தமிழ்ப் புலமை மரபின் குறிகாட்டியாக இவர் திகழ்கின்றார். நான் இந்தியாவிற்கு கல்வி கற்கச் சென்றபோது அங்குள்ள பேராசிரியர்கள் பேரறிஞர் சிவத்தம்பியிடம் கற்ற உங்களுக்கு நாம் எந்த விடயத்தைப் புதிதாகக் கற்பிக்கப்போகிறோம் எனக் கேட்டனர்.

துணைவேந்தர் பேராசியர் வசந்தி அரசரட்ணம் தனதுரையில், பேராசிரியர் கா. சிவத்தம்பியிடம் நான் கல்வி கற்கும் பாக்கியம் பெறாதபோதும், அவருடன் தந்தை - மகள் போன்ற உறவு இருந்தது. பல்துறை விற்பன்னரான அவரிடம் விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவும் மிகுந்திருந்தது என்றார்.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்துறையில் தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், விஞ்ஞானதுறை பீடாதிபதி பேராசிரியர் ச. கந்தசாமி, கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. ஞானகுமாரன்,



வணிக பீடாதிபதி ரி. தேவராஜா, செஞ்சொற் சொல்வர் ஆறு திருமுருகன், பேராயர் எஸ். ஜெபநேசன் உட்பட பல விரிவுரையாளர்கள், மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். (62)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். மறை மாவட்ட இயக்குநர் அருட்பணி வி.ஆர். ரவிச்சந்திரன் அடிகளார் தலைமையில் யாழ். மறைப்பணி நிலையத்தில் இடம்பெறும் என இயக்குநர் தெரிவித்தார். (52)

## பஸ்ரியான் சந்தி விபத்தில் மருத்துவமாது காயம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோ ஒன்றும் துவிச்சக்கர வண்டியொன்றும் நேற்றுக் காலை பஸ்த்தியான் சந்திப் பகுதியில் விபத்திற்குள்ளாகியதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த மருத்துவமாது ஒருவர் காயமடைந்துள்ளார்.

இவ்விபத்தில் விஜிதா விக்ரரின் (வயது - 40 ) என்ற மருத்துவமாதுவே காயமடைந்துள்ளார்.

பிரதான வீதியில் பயணித்த ஆட்டோ அச்சுக்கூட வீதியில் இருந்து பிரதான வீதிக்கு துவிச்சக்கரவண்டியில் பயணித்த குறித்த மருத்துவமாது பயணித்த துவிச்சக்கரவண்டி மீது மோதியதிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. (19)

## மாணவர்களின் சுற்றாடல் பாசறையில் பெற்றோரும் ஆர்வத்துடன் பங்கேற்பு

(அச்சுவேலி)

சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட சுற்றாடல் பாசறை நிகழ்வினை பெற்றோர்கள் வெகுவாக வரவேற்று பாராட்டியுள்ளதுடன் தாமும் அதில் கலந்து கொண்டு தமது பங்களிப்பினை வெளிக்காட்டியுள்ளனர்.

பாடசாலை அதிபர் நா. மகேந்திரராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்களிற்கென செயற்பாட்டுடன் கூடிய வகையில் செயல் அட்டைகளைப் பூர்த்தி செய்வதற்கான விசேட பயிற்சிகள் அளிக்கப்பட்டதுடன், சுற்றாடல் சார் செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். கல்வி வலய அதிகாரிகள், அயற் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் இந்நிகழ்விற்கு வந்திருந்து சிறப்பித்திருந்தமையானது தமது பாடசாலைக்கு மேலும் பெருமை சேர்ப்பதாகவும் பெற்றோர்கள் பலரும் தெரிவித்துள்ளனர். (03)

## புதிதாக சிறுவர் இல்லங்களை வடக்கில் திறக்க வேண்டிய நிலை

### சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர்


(யாழ். நிருபர்)

வடமாகாணத்தில் போரால் பாதிப்படைந்து பெருமளவு பிள்ளைகள் அநாதரவாகவுள்ளனர். இவர்களை பராமரிப்பதற்காகப் புதிய சிறுவர் இல்லங்களைத் திறக்க வேண்டிய தேவை உள்ளது என சைவவித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சே. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த சைவப் பெரியார் இந்து போர்ட் இராசரத்தினத்தின் பிறந்த நாள் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், புதிதாக சிறுவர் இல்லங்களைத் திறப்பதற்கு மாகாண சிறுவர் நன்னடைத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் தடை விதித்துள்ளது.

எனவே, இவ்வாறான ஒரு தடையினை வடமாகாணத்தில் விதிப்பது தொடர்பாக தேசிய மட்டத்தில் கொள்கைகளை வகிப்போர் கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார். (10)





அடைக்கல அன்னை ஆலய முன்றலில் அண்மையில் நடைபெற்ற பூநகரி அடைக்கல அன்னை முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு போட்டி நிகழ்வில் கேணல் பொன்னம்பெருமாள் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் பூநகரி பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் நிற்பதையும், சிறார்களின் விளையாட்டு நிகழ்வையும் காணலாம். (112)

## காலநிலை மாற்றத்தால் உற்பத்தியாளர் பாதிப்பு

(அச்சுவேலி)

குடாநாட்டின் பல பகுதிகளிலும் தற்போது நிலவிவரும் சிறுமழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக வெங்காயப் பயிர்ச் செய்கையாளர்கள் பலரும் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

வெங்காய அறுவடைக்கு விவசாயிகள் தயாராகும் இவ்வேளையில் இம்மழையுடன் கூடிய கால நிலையினால் வெங்காயத்தில் பூச்சித்தாக்கம் காரணமாக தாழ்கருகல் நோய் ஏற்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (03)

## மக்களுக்கு பாதிப்பு ஏற்படாது கழிவுப் பொருட்கள் எரியூட்டல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் உள்ள கழிவுப் பொருட்களை எரியூட்டுவதற்கு விசேட நடவடிக்கைகளை வைத்தியசாலையின் அபிவிருத்தி சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

இச்செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு அதற்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாப்பான முறையில் எரியூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (11)

## வடிகால்களில் வெடிப்புக்கள் உடைந்துபோகும் அபாய நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ். பொம்மைவெளி குடியிருப்புப் பகுதியில் வீதியின் தண்ணீர் வெளியேற்றுவதற்காக வடிகால்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலையில் பொம்மைவெளியின் 2ஆம் குறுக்குத் தெருவில் அமைக்கப்பட்டுள்ள வடிகால்களில் ஒரு யார் தூரத்திற்கு ஒன்றாக 28 வெடிப்புகள் காணப்படுகின்றன.

வடிகால்கள் அமைத்து ஒரு மாதம்கூட ஆகாத நிலையில் வடிகால் கள் பாவனைக்கு வரும் முன்னே வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதனால், எதிர்காலத்தில் மழை, வெள்ளம் ஏற்படும் சமயம் வடிகால் உடைத்து சிதைந்து போகும் அபாயம் நிலவுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (105)

## உள்ளூராட்சி வார போட்டிகளில் வெற்றியீட்டிய முன்பள்ளி சிறார்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினரால் தமது எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களது விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

பூக்கொத்து அமைத்தல் : முலாமிடம் பி. கபிசாயினி சயீனா முன்பள்ளி, இரண்டாமிடம் த. கவிப்பிரியன், ஞானதீபம் முன்பள்ளி, மூன்றாமிடம் ச. திரிசாயினி, சரசாலை வடக்கு முன்பள்ளி.

உருவம் அமைத்தல்: முதல் மூன்று இடங்களையும் ஞானதீபம் முன்பள்ளியைச் சேர்ந்த பி. பார்த்தீபன், டெ. கமில்ரன், அ. அபர்ணா ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

கோபுரம் அமைத்தல் : முதலாமிடம் த. கஜாங்கி, கண்ணகை முன்பள்ளி, இரண்டாமிடம் தெ. கவிப்பிரியன், ஞானதீபன் முன்பள்ளி, மூன்றாமிடம் கு. தேனுகா, கண்ணகை முன்பள்ளி.

இவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் உள்ளூராட்சி வார நிறைவு நாள் நிகழ்வில் வைத்து வழங்கப்படும் என்று நூலகர் இ. தர்மலிங்கம் தெரிவித்தார். (11)

## பேருந்துகளில் வெவ்வேறு கட்டணங்கள் அறவிடப்படுவதாக பயணிகள் குற்றச்சாட்டு

(முழங்காவில்)

பூநகரியூடாக சேவையில் ஈடுபடும் தனியார் அரச பேருந்துகள் வெவ்வேறு கட்டணங் களைப் பிரயாணிகளிடம் அறவிட்டு வருவதாகப் பயணிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

தனியார் பேருந்துகள் பூநகரியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு 50 ரூபாவும், மன்னாரில் இருந்து சேவையில் ஈடுபடும் அரச பேருந்து பூநகரியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு 61 ரூபாவும் பூநகரியிலிருந்து யாழ். செல்லும் அரச பேருந்து 40 ரூபாவும் மற்றுமொரு அரச பேருந்துச் சேவை 50 ரூபாவும் அறவிடுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தனியார் பேருந்துகளில் நிலவி வருவது போன்று அரச பேருந்துகளிலேயே இவ்வாறு வெவ்வேறு கட்டடம் அறவிடப்படுவது மக்களை எரிச்சலடையச் செய்துள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு இவ்வேறுபாட்டை நீக்கி ஒரேவிதமான கட்டணத்தை அறவிட உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (112)

# மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்கொண்டு வரும் கருவியே கணிப்பீடாகும்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் வை.இராசலிங்கம்

(அச்சுவேலி)

மாணவர்களிடம் மறைந்து கிடக்கின்ற ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிக்கொண்டு வரக்கூடிய ஓர் கருவியாக பாடசாலைமட்டக் கணிப்பீடு விளக்குகின்றது.

இவ்வாறு யாழ்ப்பாண கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வை.இராசலிங்கம் தெரிவித்துள்ளார்.

பாடசாலைமட்டக் கணிப்பீடு தொடர்பாக யாழ்.வலய அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட செயலமர்வின் போது அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கணிப்பீடு என்பது பிள்ளைகளின் பல்வேறு மனவெளிப்பாடுகளையும் வெளிக்கொண்டு வருவதற்கான உந்து சக்தியாகவும், திறன்களை வளர்த்துக் கொள்ளக்கூடிய உன்னத செயற்பாடாகவும் விளங்குகின்றது. எனவேதான் கணிப்பீட்டுச் செயற்பாடுகள் கற்றலை விருத்தி செய்து கொள்ளக் கூடிய ஓர் கருவியாக கல்வியாளர்களால் கருதப்படுவதுடன், அனைத்துப் பாடசாலைகளிலும் பல வருடங்களாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தரம் 6 முதல் 13 வரையான வகுப்புக்களில் பயிலும் மாணவர்களுக்குத் தவணைப் புள்ளிகளுடன் கணிப்பீட்டுப் புள்ளிகளும் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. மேலும் பொதுப் பரீட்சை முடிவுகளுடன் கணிப்பீட்டுப் புள்ளிகளும் இணைந்து வெளியிடப்படுவதன் மூலம் அதன் முக்கியத்துவம் பெருமளவில் உணரப்பட்டுள்ளது.

எனவே கணிப்பீட்டினை நடைமுறைப்படுத்தும் போது உரிய முன் ஆயத்தத்துடன் கூடிய விழிப்புணர்வுடன் ஒவ்வொரு பாட ஆசிரியர்களும் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (09)

# பத்தாயிரம் பேர் பங்குகொண்ட கெருடமடு ஆடி அமாவாசை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு கெருடமடு பிள்ளையார் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற ஆடி அமாவாசை விரத நிகழ்வில் சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர்.

காலை 6.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகைதந்த இவர்கள் தமது நேர்த்திக்களை நிறைவேற்றினர். மதியம் அன்னதான நிகழ்வும் இடம்பெற்றது.

இடப்பெயர்வுகளுக்குப் பின் இப்பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டு வரும் நிலையில் பல வருடங்களாக தமது நேர்த்திகளை நிறைவேற்ற முடியாது இருந்தவர்கள் இதில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. வன்னிப் பிரதேசத்தில் ஆடிஅமாவாசை நேர்த்திக் கடன் இந்த ஆலயத்திலேயே சிறப்புற இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (40)

# தரம் 5 மாணவர்களுக்கு பரீட்சை

(அச்சுவேலி)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படவிருந்த இறுதிப் பரீட்சை உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற்ற காரணத்தால், உரிய கால அட்டவணைக்கேற்ப நடத்த முடியாமையினால் அப் பரீட்சை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறுமென வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அனைத்துப் பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை தேசிய ரீதியில் நடைபெறும் பரீட்சை போன்று இடம்பெறுமெனவும் வினாத்தாள் 1 காலை 9.30 -10.15 வரையும், வினாத்தாள் 2 காலை 10.45 முதல் 12.00 மணி வரை நடைபெறவுள்ளதுடன் ஆசிரிய ஆலோசகர்களின் வழிகாட்டலில் புள்ளித்தாள்களுக்கு ஏற்ப ஆசிரியர்களால் மதிப்பீட்டுப் பணிகள் நிறைவேற்றப்படும் எனவும் அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (03,109)

# இடைநிலை பாடசாலைகளுக்கான அபிவிருத்திக் கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

ஆயிரம் பாடசாலை வலையமைப்புக்கான இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு வட மாகாண கல்வித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு வட மாகாணத்திலுள்ள சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும், வலய திட்டமிடல் பணிப்பாளர்களும், கோட்டக் கல்வி அதிகாரிகளும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி பீ.செல்வின் இறேனியஸ் அறிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் ஆயிரம் பாடசாலை துரித அபிவிருத்தித் திட்டத்தில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் பட்டியல் மத்திய கல்வி அமைச்சின் தெரிவுச் செயன்முறைக் கொள்கைக்கமைய தயாரிக்கப்பட்டு, மத்திய கல்வி அமைச்சு மற்றும் நாடாளுமன்றச் செயற்குழு என்பவற்றின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் முன்னிலையில் ஆயி ரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கொள்கை விபரங்களும், விடயத்துடன் தொடர்புபட்ட சகலருக்கும் அறி வுறுத்தப்பட்டு, பாடசாலை அதிபர்களின் சம்மதங்களும் பெறப்பட்டது.

2012 ஆம் ஆண்டில் தரம் 1 நீக்குவது தொடர்பாக சில அதிபர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளார்கள். சில அதிபர்கள் தளம்பல் மனநிலையிலும் காணப்படுகின்றனர்.

மறுப்புத் தெரிவிக்கும் பாடசாலைகள் தெரிவுப் பட்டியலிலிருந்து நீக்கப்படுமெனவும், மத்திய கல்வி அமைச்சினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என வடமாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி பீ.செல்வின் இறேனியஸ் அறிவித்துள்ளார்.




கிளிநொச்சி அக்கராயன் ப.நோ.கூ. சங்கத்தினரால் உருவாக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்ட எரிபொருள் நிலையத்தினைக் காணலாம். (121).

# அறிவுறுத்தல் கூட்டம்

எதிர்வரும் ஓகஸ்ட் எட்டாத் திகதி நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சை உத்தியோகத்தர்களிற்கான பரீட்சை நடத்துதல் தொடர்பான அறிவுறுத்தற் கூட்டம் நடைபெறவுள்ளதாக உதவிப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட அதிபர், ஆசிரியர்களிற்கான இக்கூட்டம் எதிர்வரும் நாலாம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பரீட்சை நிலைய இணைப்பு உத்தியோகத்தராகவும், உதவி இணைப்பு உத்தியோகத்தராகவும், பரீட்சை நிலைய மேற்பார்வையாளராகவும், உதவி மேற்பார்வையாளராகவும் நியமனம் பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், சேவைக்கால ஆசிரியர்கள் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (06)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(31.07.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
ஆடி 15 ஆம் நாள்.
இராகுகாலம் 4.33–6.03, சுபநேரம் 9.03 – 10.33,
நட்சத்திரம்: பூசம் காலை 7.14 வரை
திதி: பிரதமை மு.இ. 11.03

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, திருட்டுப் போகலாம், தேக ஆரோக்கியம், விருத்தினர் வருகை.

**ரிஷபம:–** பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, கடன் தொல்லை, மனச் சஞ்சலம், சகோதர வெறுப்பு.

**மிதுனம் :–** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, கடன் வசூல், இரக்க சிந்தை, விருந்தினர் வருகை.

**கடகம்:–** பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, மனச் சஞ்சலம், சகோதர வெறுப்பு, அதிகாரப் போட்டி.

**சிம்மம்:–** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, மனச் சஞ்சலம், தியாக உணர்வு, இரக்க சிந்தை.

**கன்னி :–** பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, மனச்சஞ்சலம் சகோதர வெறுப்பு, அதிகாரப் பகிர்வு, தேக சுகக் குறைவு.

**துலாம் :–** பணவரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, மனச் சந்தோஷம், தியாக உணர்வு.

**விருச்சிகம்:–** பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, மனச் சஞ்சலம், உடல் நலம் பாதிப்பு, கடன் தொல்லை.

**தனுசு:–** பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, மனச் சந்தோஷம், தியான உணர்வு, தேக ஆரோக்கியம்.

**மகரம:–** பணக்கஷ்டம், குடும்பத்தில் கவலை, அயலவர் தொல்லை, நண்பர் உதவி.

**கும்பம் :–** பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, மனச் சஞ்சலம், அயலவர் தொல்லை, நண்பர் உதவி.

**மீனம்:–** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, மனச் சந்தோஷம், தேக ஆரோக்கியம், நண்பர் தொல்லை.

# உவர்நீராக மாறிவருகின்ற கிணறுகள் குடிநீருக்காக அலையும் பூநகரி மக்கள்

(பூநகரி)

பூநகரிப் பிரதேசத்தில் நன்நீர்க் கிணறுகள் உவர் நீராக மாறிக் கொண்டிருப்பதால், மக்கள் குடிநீருக்காக அலையும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

பூநகரிப் பிரதேச சபையால் சகல கிராமங்களிலும், பாடசாலைகளிலும் 80 இற்கும் மேற்பட்ட நீர்த்தாங்கிகளை வைத்து பவுசர் மூலமாக இரண்டு நாளுக்கொரு தடவை நீர் விநியோகம் செய்து வரும் நிலையில் தமது பாவனைக்கு நீர் போதாமல் இருப்பதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுபற்றி பூநகரிப் பிரதேச சபை செயலாளர் திருமதி எம்.சிவகுமாரியிடம் தொடர்பு கொண்டபோது தினமும் நாற்பதாயிரம் லீற்றர் நீரைப் பவுசர் மூலம் தூரத்திலுள்ள நன்நீர்க் கிணறுகளில் பெற்று விநியோகம் செய்து வருவதாகவும், நன் நீர்க்கிணறு வற்றி, தினமும் ந்ரைப் பெறமுடியாமல் இருப்பதால் நன்நீரைப் பெறுவதில் தாங்கள் பெரும் போராட்டம் நடத்தும் நிலை உள்ளதாகவும் முடிந்த வரை சகல கிராமங்களுக்கும் ஒரு ஒழுங்கு முறையில் குடிநீரை விநியோகம் செய்து வருகிறோம் எனத் தெரிவித்த பிரதேச சபைச் செயலாளர் மாதந்தோறும் தமது சபை நிதியிலிருந்து ஒன்றரை இலட்சம் ரூபாவுக்கு மேல் செலவிடப்படுவதாகவும் தெரிவிததார். (112)

# நுண்கலை பட்டதாரி ஆசிரியர்கள் பாடசாலைகளில் கடமையேற்றனர்

(அச்சுவேலி)

நுண்கலை பட்டதாரி ஆசிரியர் நியமனத்தின் கீழ் ஆசிரியர் நியமனம் பெற்ற புதிய ஆசிரியர்கள் பலர் இவ்வாரமே தமது நியமனத்திற்குரிய பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

நடனம், சங்கீதம், சித்திரம் ஆகிய பாடத்துறைகளுக்கு நியமிக்கப்பட்ட தமிழ்மொழி மூல ஆசிரியர்களில் பலர் வன்னி, வவுனியா போன்ற மாவட்டங்களில் உள்ள கஸ்ர மற்றும் அதிகஸ்ர பிரதேச பாடசாலைகளிற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள அதேவேளை மிகவும் சொற்ப அளவான ஆசிரியர்களே குடாநாட்டுக்குப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.


இதேவேளை நியமனம் பெற்ற சில ஆசிரியர்கள் கடந்த வாரத்தில் நியமனத்திற்குரிய பாடசாலைகளில் கடமைகளை பொறுப்பேற்க வில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

# வடக்கு மாகாண பாடசாலை மெய்வல்லுநர் 14 பதக்கங்களை அள்ளியது பற்றிக்ஸ்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி 14 பதக்கங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் ஐந்து தங்கம், ஏழு வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளது.

இதில் 15 வயதிற்குட்பட்டோர் பிரிவில் 4ஓ100 மீற்றர், 4ஓ400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் பி. எசலராஜ், ஆர். ஜெனுசன், சி.ஆர். சிந்துஜன், என். லோகசீலன், ஏ. ஜெரிக்சன், ஜே. கொலின்ஸ், ஆகியோர் இரு பிரிவுகளிலும் முதலாமிடத்தையும், 19 வயதிற்குட்பட்டோர் பிரிவில் 110 மீற்றர் தடை தாண்டலில் சி. மடோன் எல்விஸ் முதலாமிடத்தையும், ஈட்டி எறிதலில் டபிள்யூ சி.எல். லிவிங்டன் முதலாமிடத்தையும், 19 வயதிற்குட்பட்டோர் பிரிவு கரம் போட்டியில் முதலாமிடத்தையும் பெற்று மொத்தமாக ஐந்து தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளது.



கரம் போட்டியில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட 19 மற்றும் 15 வயதுப் பிரிவு அணியினர் பொறுப்பாசிரியருடன் நிற்பதைக் காணலாம்.

15 வயதிற்குட்பட்டோர் பிரிவு ஈட்டி எறிதலில் பி.ஏ. கில்மன்ராஜ் இரண்டாமிடத்தையும், குண்டெறிதலில் ஜே. அல்வின் இரண்டாமிடத்தையும், 21 வயதிற்குட்பட்டோர் பிரிவு 100 மீற்றர் மற்றும் 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டப்போட்டியில் ஜே.பி. எரிக் பிரதாப் இரண்டாமிடத்தையும், முப்பாய்ச்சல் போட்டியில் ஏ. அன்ரன் நிதர்சன் இரண்டாமிடத்தையும், 15 வயதிற்குட்பட்டோர் கரம் போட்டியில் இரண்டாமிடத்தையும், 19 வயதிற்குட்பட்டோர் பிரிவு கூடைப் பந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தையும் பெற்று மொத்தம் ஏழு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளது.

அத்துடன் 19 வயதிற்குட்பட்டோர் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் சி. மடோண் எல்விஸ் மூன்றாமிடத்தையும், 19 வயதிற்குட்பட்டோர் பிரிவு கால்பந்தாட்டப் போட்டியில் மூன்றாமிடத்தையும் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளது.

## முன்பள்ளிகளின் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயதிற்குட்பட்ட சகல முன்பள்ளி மாணவர்களுக்குமான விளையாட்டு விழா இன்று காலை 8.00 மணிக்கு கோட்ட மட்டப் போட்டியும் 11.00 மணிக்கு வலய மட்ட போட்டி யாழ் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. வலய மட்டப் போட்டிகள் வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப. உதயகுமார், சிறப்பு விருந்தினராக யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ். சேதுராஜாவும் கலந்து கொள்ளவுள்ளார்.

காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ள கோட்ட மட்டப் போட்டியிலிருந்து மூன்று அணிகள் தெரிவு செய்யப்பட்டு 11.00 மணிக்கு நடைபெறவுள்ள வலய மட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளது.

இதில் சுமார் 1000இற்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

## ஹொக்கி, கராத்தே, மேசைப்பந்து போட்டி வடமாகாண அணிகளும் பங்கேற்கின்றன

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படுகின்ற ஹொக்கி, கராத்தே மற்றும் மேசைப்பந்தாட்ட தேசிய ரீதியான போட்டிக்கு வடமாகாண அணிகளும் பங்குகொள்கின்றன.

இப்போட்டிகள் நேற்றும் இன்றும் நடைபெறுகின்றது.

இதில் ஆண், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிக்கு வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திச் செல்லும் ஆண்கள் அணிக்கு ஊர்காவற்றுறை விளையாட்டு உத்தியோகத்தர் ரதீஸ்கண்ணாவும், பெண்கள் அணிக்கு யாழ். வலைப்பந்தாட்ட பயிற்றுநர் செல்வி எஸ். மனோன்மணியும் பயிற்றுநர்களாகச் செல்கின்றனர். இப்போட்டி மாத்தளையில் நடைபெறுகின்றது.

கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய ரீதியான கராத்தே போட்டியில் ஆண்கள் அணியில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு வீரர்களும், பெண்கள் அணியில் யாழ். மாவட்ட அணி வீராங்கனைகளுமே வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டிகளில் பங்குபற்றுகின்றனர்.

இவ்வணியின் பயிற்றுநராக யாழ்ப்பாண பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் ரி.ஆர். நித்திலநாயகம் சென்றுள்ளார்.

இதேவேளை, பொரளையில் நடைபெறவுள்ள மேசைப்பந்தாட்டப் போட்டிக்கு யாழ். மாவட்ட வீராங்கனைகளே வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## வடமாகாண தடகளப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு முருங்கனில்



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் தடகளப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பும் . மன்னார் முருங்கன் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளதாக வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை தெரிவித்துள்ளார். இதில் ஆண்கள் பிரிவில் 170 வீரர்களும், பெண்கள் பிரிவில் 150 வீராங்கனைகளும் பங்குகொள்ளவுள்ளனர் என்றும், இப்போட்டி நடைபெறும் திகதிகள் பின்னர் அறி விக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விளையாட்டு அதிகாரிகள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் உட்பட விளையாட்டின் உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் யாவும் பூர்த்தியாகியுள்ளதாகவும், சிறப்பான முறையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

## யாழ். மாவட்டத்திலும் 'றக்பி'

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் றக்பி விளையாட்டை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணப் பிரதேச இராணுவத் தளபதி மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் பிரபல்யம் மிக்க விளையாட்டுக்களில் ஒன்றாகக் கருதப்படும் றக்பி போட்டி யாழ். மாவட்டத்தில் விளையாடப்படாத நிலையில் இப்போட்டிகளை யாழ். மாவட்டத்திலும் முன்னெடுப்பதற்கான வேலைத் திட்டங்களை அவர் மேற்கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதன் முதற்கட்டமாக பயிற்சி முகாம் ஒன்று நடாத்தப்பட்டு, அதன் பின்னர் போட்டிகளை நடாத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், விரைவில் போட்டிகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த றக்பி அணியை ஒன்றை யாழ். மாவட்டத்தில் உரு வாக்க முடியும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, வடமாகாணத்தில் ரபிக் போட்டி நடாத்துவது குறித்தும், வடமாகாணத்தில் ரபிக் வீரர்களை உருவாக்குவது குறித்தும் இலங்கை றக்பி சங்கமும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். பல்கலைக்கழக அணி கால்பந்தாட்டத்தில் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி யில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் சம்பியனானது. கிழக்கு பல்கலைக்கழகம் மட்டக்களப்பில் ஒழுங்கு செய்த மேற்படி போட்டிகளில் யாழ்ப்பாண பல்கலைக் கழக அணியும், கிழக்கு பல்கலைக்கழக அணியும் இறுதிப் போட்டிக்கு தெரிவாயின. இறுதிப் போட்டியில் 2-1 கோல் வித்தியாசத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் வெற்றி பெற்று சம்பியனானது.

இப்போட்டியில் இலங்கையிலுள்ள 13 தேசிய பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றியமை குறிப்பிடத் தக்கதாகும்.

இதேவேளை, ஆண்களுக்கான தடகளப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி தொடர்ந்து மூன்று வருடங்களாக முதலிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். லீக் கால்பந்தாட்டப் போட்டி முதல் போட்டியில் அன்ரனீஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

யாழ். லீக்கினால் நடாத்தப்படும் விலகல் கிண்ணத்திற்கான கால்பந்தாட்டப் போட்டி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் போட்டியில் அன்ரனீஸ் 'பி' அணியும், யாழ். ஐக்கியம் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய அன்ரனீஸ் 'பி' அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.

அடுத்து பாடுமீன் மற்றும் பாரதி அணிகளுக்கிடையிலான போட்டி இடம்பெறவிருந்தது. இந்நிலையில் பாரதி அணி சமூகமளிக்காமையால் பாடுமீன் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இப்போட்டிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## மட்டுவில் கரப்பந்தாட்டச் சுற்றில் இந்து இளைஞர், வளர்மதி வெற்றி

(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் நடாத்தும் கரப்பந்தாட்ட காலிறுதிப் போட்டியில் ஆரவங்கால் இந்து இளைஞர் பி மற்றும் கைதடி வளர்மதி அணி வெற்றிபெற்றன.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் 46ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டியில் நேற்று முன்தினம் இரவு 7.00 மணிக்கு நடைபெற்ற போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் 'பி' அணி மோதியது. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் 'பி' அணி 2 : 1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றுக் கொண்டது.

இதேவேளை, மற்றுமொரு போட்டியில் கைதடி வளர்மதி அணியும், சாவகச்சேரி சிவன் அணியும் மோதின. இதில் கைதடி வளர்மதி அணி 2 : 1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது.

இன்று இரவு 7.00 மணிக்கு மட்டுவில் ஐக்கிய அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மின்னொளியில் இப்போட்டி நடைபெறுவதால் பெருமளவான ரசிகர்கள் போட்டியைக் கண்டு களித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (118)

# 2014 பிபா உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்தது இந்திய அணி

(புதுடில்லி)

வரும் 2014இல் பிரேசிலில் நடக்கவுள்ள பிபா உலகக் கோப்பை கால்பந்து தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை இந்திய அணி இழந்தது.

பிரேசிலில், வரும் 2014ம் ஆண்டு பிபா உலகக் கோப்பை கால்பந்து தொடர் நடக்கவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள், உலகின் பல்வேறு பகுதிகளில் நடந்து வருகிறது. இதில் ஆசிய பிரிவுக்கான இரண்டாவது சுற்றில் பிபா தரப்படுத்தலில் 153ஆவது இடத்தில் உள்ள இந்திய அணி, 109ஆவது இடத்தில் உள்ள ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை எதிர்கொண்டது. இதில் இரண்டு போட்டிகள் நடந்தது. துபாயில் நடந்த முதல் போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. நேற்று முன்தினம் டில்லியில் உள்ள அம்பேத்கார் மைதானத்தில் இரண்டாவது போட்டி நடந்தது.

மழை காரணமாக போட்டி அரைமணி நேரம் தாமதமாக துவங்கியது. தொடக்கத்தில் இருந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு ஆட்டத்தின் 39ஆவது நிமிடத்தில் முகமது அல் ஹேக்கி முதல் கோல் அடித்து நம்பிக்கை அளித்தார். இதற்கு இந்திய வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இதனால் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி முதல் பாதி முடிவில் 1-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியிலும் ஆதிக்கத்தை தொடர்ந்த ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு தலைவர் அலி அல் வெஹபி, 71ஆவது நிமிடத்தில் கோல் அடித்து 2-0 என முன்னிலை பெற்றுத் தந்தார். இதற்கு, 74ஆவது நிமிடத்தில் இந்தியாவின் ஜேஜி லால்பெகுலா, பதிலடி கொடுத்தார். தொடர்ந்து போராடிய இந்திய அணிக்கு, 92ஆவது நிமிடத்தில் கவுரமாங்கி சிங் ஒரு சூப்பர் கோல் அடிக்க, ஆட்டநேர முடிவில் 2-2 என சமநிலையானது. இரண்டு போட்டிகளின் முடிவில் ஐக் கிய அரபு எமிரேட்ஸ் அணி 5-2 என்ற கணக்கில் மூன்றாவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

## மீண்டும் வூட்ஸ்


காயம் காரணமாக கடந்த மூன்று மாதங்களாக ஓய்வெடுத்து வரும் நட்சத்திர வீரர் டைகர் வுட்ஸ், அமெரிக்காவின் அக்ரான் நகரில் (ஒஹையோ மாகாணம்) அடுத்த வாரம் தொடங்க உள்ள பிரிட்ஜ்ஸ்டோன் இன்விடேஷனல் கோல்ப் போட்டித் தொடரில் களமிறங்குகிறார்.

இது குறித்து டைகர் வூட்ஸ் குறிப்பிடுகையில், நீண்ட இடைவெளிக்குப் பின்னர் களம் இறங்குவது மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இருப்பினும் ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கு அமைவாக எனது ஆட்டம் அமையும். சில கசப்பான காலங்கள் என் வாழ்க்கையில் நிகழ்ந்ததை மறந்து புதுத் தென்புடன் போட்டிக் களத்தில் ஆடவுள்ளேன் எனக் குறிப்பிட்டார்.

## 3 ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இந்திய அணிக்கு அவசியமானது

### என்கிறார் காவஸ்கர்



(மும்பை)

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்கு சுற்றுலாவை மேற்கொள்ளும் போது மூன்று ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை அணியில் உள்ளடக்க வேண்டும் என காவஸ்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளில் டெஸ்ட் தொடரில் பங்கேற்க செல்லும் போது, இரண்டு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் போதுமானது. ஒரு வேளை இவர்களுக்கு காயம் ஏற்படும் பட்சத்தில், ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக யாரை வேண்டுமானாலும் களமிறக்கலாம்.

ஆனால் அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளுக்கு டெஸ்ட் தொடரில் பங்கேற்க செல்லும் போது, குறைந்தபட்சம் மூன்று ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். அப்போது தான் காயம் உள்ளிட்ட பிரச்சினைகளில் இருந்து தப்ப முடியும்.

ஏனெனில் இங்குள்ள மைதானங்களில், பின் வரிசையில் களமிறங்கும் வீரர்களால், ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக செயல்படுவது கடினம். இதனை உணர்ந்து தேர்வுக் குழுவினர், வரும் காலங்களில் வீரர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்று சுனில் கவாஸ்கர் தெரிவித்தார்

## கோபா அமெரிக்க கால்பந்தாட்டம் ஆர்ஜென்ரீனாவின் தோல்வி வேதனை

### வருத்தம் கொள்கிறார் மெஸ்சி



கோபா அமெரிக்கா கால்பந்து போட்டியில் ஆர்ஜென்ரீனா அணி மோசமான தோல்வியை தழுவியமை மிகுந்த வேதனை அளிக்கும் ஒன்று என மெஸ்சி தெரிவித்தார்.

2 ஆண்டுகளில் கோபா அமெரிக்கா கோப்பை போட்டியில், அர்ஜென்டினா அணி சம்பியன் ஆக, மெஸ்சி உதவுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கோபா கால்பந்து தொடரின் காலிறுதியில் தண்ட உதை மூலம் உருகுவேயிடம் அர்ஜென்டினா தோற்றது. இந்தத் தோல்வி மெஸ்சியை உறுக்கி உள்ளது.

இந்த தோல்வியை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நினைத்தற்கு மாறாக நடந்து உள்ளது. நாங்கள் முன்னோக்கி செல்ல விரும்புகிறோம் என மெஸ்சி தெரிவித்தார்.

அத்துடன் கோபா பந்தயத்தில் அர்ஜென்டினாவுக்கு ஏற்பட்ட மோசமான அனுபவம் என்னை மிகவும் பாதித்து உள்ளது.

முக்கியமான ஆட்டங்களில் வருகின்றன உலகக்கோப்பை போட்டிக்கு தகுதி பெற நாங்கள் தயாராக வேண்டும் என்றும் தெரிவித்தார். பார்சிலோனா கிளப்பில் சிலி வீரர் அலெக்சிஸ் சான்செஸ் புதிதாக வந்துள்ளார். இதனை பெரிதும் வரவேற்பதாக மெஸ்சி தெரிவித்தார்.

## மூன்றாவது சுற்றில் செரீனா வில்லியம்ஸ்



பேங் ஓப் வெஸ்ட் கிளாசிக் ரென்னிஸ் தொடரின் மூன்றாவது சுற்றுக்கு அமெரிக்காவின் செரீனா வில்லியம் தகுதி பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் ரஷ்யாசின் மரிய ஹரபோவாவை செரீனா வில்லியம் எதிர்கொண்டார்.

இந்தப் போட்டியில் 6-2, 3-6, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றே மூன்றாவது சுற்றுக்கு செரீனா வில்லியம் தெரிவானார்.

இந்த வெற்றி மகிழ்ச்சி அளிப்பதாகவும், அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடருக்கு மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தக்கூடிய வெற்றியாகவும் இது அமைந்துள்ளது என வெற்றியின் பின்னர் செரீனா வில்லியம் குறிப்பிட்டார்.

அத்துடன் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் லீக் போட்டியுடன் வெளியேறியமை மிகுந்த வேதனையைத் தருவதாகவும், ஷரபோவாவை வென்றதன் மூலம் நல்ல உற்சாகம் ஏற்பட்டிருப்பதாகவும், இதன் பிரதிபலிப்பு தொடர்ந்தும் நீடிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இணைந்து செயற்பட முடியாது

ஹொக்கி இந்தியா, இந்திய ஹொக்கி சம்மேளனம் ஆகிய அமைப்புகள் அடுத்த நிர்வாகிகள் தேர்தல் (2012) நடைபெறும் வரை தற்காலிகமாக இணைந்து செயற்பட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக இரு அமைப்பினரும் சம அளவில் இடம் பெறும் வகையில் செயற்குழு அமைக்கவும் முடிவு செய்யப்பட்டது. இந்த தற்காலிக முடிவை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சர்வதேச ஹொக்கி சம்மேளனம் அறிவித்துள்ளது.

இரு அமைப்புகளும் தற்காலிகமாக இணைந்து செயற்பட முடிவு செய்து இருப்பது ஆச்சரியமாகவும், ஏமாற்றம் அளிப்பதாகவும் உள்ளது. இதனால் சம்பியன்ஸ் கோப்பை போட்டி மற்றும் ஒலிம்பிக் தகுதிப் போட்டி ஆகியவற்றை நடத்தும் பொறுப்பை இந்தியா இழக்கக்கூடும். ஹொக்கி இந்தியா அமைப்பை மட்டும் தான் சர்வதேச ஹொக்கி சம்மேளனம் அங்கீகரித்துள்ளது என்றும் கூறியுள்ளது.


## உசைன் போல்ட் மீண்டும் முதலிடம்

சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் நடைபெற்று வரும் ஸ்டாக்ஹோம் டைமண்ட் லீக் தடகளப் போட்டிகளில் 200 மீற்றர் ஓட்டத்தில் உசைன் போல்ட் முதலிடம் வந்தார்.

99 ஆண்டு கால பழைய விளையாட்டரங்கான இதில் கடும் காற்று வீசியது. இருப்பினும் உசைன் போல்ட் அதனை எதிர்த்து இலக்கை 20.03 வினாடிகளில் எட்டி சாதனை புரிந்தார்.

முதல் இரண்டு முறை முன்பு இந்தப் போட்டிகளில் பங்கு பெற்ற உசைன் போல்ட் முதலிடம் பெற முடியவில்லை. தற்போது இவர் இங்கு வெற்றி பெறுவது முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

மகளிர் 5,000 மீற்றர் ஓட்டத்தில் கென்ய வீராங்கனை ஜெப்கெமாய் செருயோட் 14 நிமிடம் 20.87 வினாடிகளில் இலக்கை எட்டி 3ஆவது அதிவேக ஓட்டம் என்ற சாதனையை நிகழ்த்தினார். ரஷ்யாவின் இசின்பயேவா போல்வால்ட் பிரிவில் இந்த சீசனின் அதிக பட்ச உயரமான 4.76 மீற்றர் உயரம் தாண்டினார்.




800 மீற்றர் உலக சாம்பியன் செமென்யா 8ஆவது இடம் வந்து பலத்த ஏமாற்றமளித்தார். மகளிர் 100 மீற்றர் ஓட்டத்தில் அமெரிக்க வீராங்கனை கார்மெலீட்டா ஜீட்டர் 11.15 வினாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் வென்றார்.

## அரையிறுதியில் சானியா ஜோடி

அமெரிக்காவின் கொலேஜ் பார்க்கில் சிட்டி ஓப்பன் ரென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது.

இப்போட்டியின் மகளிர் இரட்டையர் அரையிறுதிச் சுற்றுக்கு இந்தியாவின் சானியா - கஜகஸ்தானின் யாரோஸ்லாவா ஜோடி முன்னேறியுள்ளது.

இந்த ஜோடி காலிறுதிச்சுற்றில் 6-3, 6-4 என்ற நேர் செட்களில் அமெரிக்காவின் லின்ட்ஸெலி - மேகன் மௌல்டன் ஜோடியை வீழ்த்தியதன் மூலம் அரையிறுதிக்கு முன்னேறியது.

## குண்டெறிதல் வீரர் ஒலிம்பிக்கிற்கு தகுதி

லண்டனில் 2012 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க இந்திய குண்டு எறிதல் வீரர் ஓம் பிரகாஷ் கர்ஹானா தகுதி பெற்றுள்ளார்.

ஹங்கேரியின் ஷோம்பத்லே நகரில் நடைபெற்ற சர்வதேச தடகள சம்மேளன சங்க போட்டியில் தங்கம் வென்றதன் மூலம் ஒலிம்பிக் போட்டி மற்றும் தென்கொரியாவில் ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் உலக சம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க அவர் தகுதி பெற்றுள்ளார்.

ஒலிம்பிக் போட்டியில் தகுதி பெறுவதற்கு 20 மீற்றர் தூரம் குண்டு எறிய வேண்டும் என அளவு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஓம் பிரகாஷ் 20.4 மீற்றர் தூரம் குண்டு எறிந்து ஒலிம்பிக்கில் விளையாட தகுதி பெற்றார்.

20.4 மீற்றர் தூரம் குண்டு எறிந்ததே அவரின் அதிகபட்ச சாதனையாகும்.

## இந்தியாவிலிருந்து 1000 பஸ்கள் இலங்கைக்கு இறக்குமதி

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு 1000 பஸ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

அசோக் லேலண்ட் ரகத்தைச் சேர்ந்த ஆயிரம் புதிய பஸ்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மாணித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சின் தகவல் பிரிவுகள் தெரிவிக்கின்றன.

இலங்கை போக்குவரத்துச் சபையிடம் கையளிக்கப்படவுள்ள இந்த பஸ்கள், ஒரு டிப்போவுக்கு 40 என்ற ரீதியில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் மேற்படி தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# தனிப்பட்ட தாக்குதலை நடத்துகிறது சனல் - 4 குற்றஞ்சாட்டுகிறார் சவேந்திர சில்வா

(கொழும்பு)

**பிரிட்டனின் சனல் 4 அலைவரிசை புதிதாக ஒளிபரப்பிய ஒளிப்படமானது தன்மீதும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மீதுமான தனிப்பட்ட தாக்குதலாகும் என ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கூறியுள்ளார்.**



"இலங்கையின் கொலைக்களங்கள்" எனும் வீடியோவை ஒளிபரப்பியதன் மூலம் இலக்குகளை அடைய முடியாமல் போனதால் எம்மை பழிவாங்குவதற்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நியூயோர்க்கிலிருந்து தொலைபேசி மூலம் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சரணடைந்தவர்களை சுட்டுக்கொல்லுமாறு பாதுகாப்புச் செயலர் தனக்கு உத்தரவிட்டதாக, இறுதியாக ஒளிபரப்பான வீடியோவில் பெர்னாண்டோ எனக் கூறப்படும் ஒரு நபர் தெரிவித்துள்ளார்.

58 ஆவது படைப்பிரிவின் தளபதி என்ற வகையில் தனது படையணித் தளபதிகளுக்கும் கட்டளைத் தளபதிகளுக்கும் தன்னால் எத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் பெர்னாண்டோ என்ற ஒருவர் அங்கு இருக்கவில்லை. அத்துடன் யுத்தத்தின் இறுதியில் எனது படைப்பிரிவிலிருந்து எந்த உத்தியோகஸ்தரும் விலகியோடவும் இல்லை

"தலைகள் இல்லாத சடலங்களை தான் கண்டதாகவும் பெர்னாண்டோ கூறியுள்ளார். ஊடகங்கள் அங்கிருந்தன, சிப்பாய்கள் இருந்தனர். அவர்களில் ஒருவரும் மோதலின்போது அத்தகைய காட்சிகளை காணவில்லை என உறுதியளிக்கிறேன்"

என்னை எதிர்கொள்வதற்காக சனல் 4 ஊடகவியலாளர்கள் நீண்டகாலமாக தன்னை பின்தொடர்ந்தனர் கூறினார்.

"நியூயோர்க்கில் அவர்கள் என்னை எதிர்கொண்டனர். என்னை ஒரு நிமிடம் செவ்வி காணப்போவதாக அவர்கள் தெரிவித்தனர். நான் அவர்களுடன் 40 நிமிடங்கள் பேசியதுடன் எனது ஐ.நா. அலுவலகத்திற்கும் அழைத்துச்சென்றேன்.

எனது உத்தியோகஸ்தர்களும் நான் வழங்கிய நேர்காணலை பதிவுசெய்தனர். நான் அவற்றை உள்ளூர் ஊடகங்களுக்கும் வழங்கினேன். சனல் 4லின் புதிய வீடியோவில் 80-90 சதவீமானவை இக்கொலைகளுக்கு என்னை குற்றம்சாட்டுவதாக உள்ளது.

முதலாவது வீடியோவை அவர்கள் ஒளிபரப்பியவுடன் நாம் பல அடிப்படைத் தவறுகளும் பக்கச்சார்பான கருத்துக்களும் இருப்பதாக சுட்டிக்காட்டியபின் அவர்கள் திரும்பி வரவில்லை.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். நான் இப்போது ராஜதந்திரியாக உள்ளபோதிலும் இன்னும் இராணுவ சேவையில் இருக்கிறேன். எனவே, பாதுகாப்புப் படையினரின் புகமுக்கு பங்கம் விளைவிப்பதற்காக இத்தகைய வீடியோக்களை ஒளிபரப்பும் சனல் 4 அலைவரிசையின் நம்பகத்தன்மையை அது கேள்விக்குறியாக்குகிறது" என அவர் மேலும் கூறினார்.

# இத்தாலியின் முதலீட்டுடன் வவுனியாவில் ஆடைத்தொழிற்சாலை

(வவுனியா)

வவுனியா இராசேந்திரகுளத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள தனியாருக்கு சொந்தமான காணியில் இத்தாலி நாட்டு முதலீட்டு ஆடைத்தொழிற்சாலைக்குரிய அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கொழும்பிலுள்ள இத்தாலி நாட்டு உயர்ஸ்தானிகர், மேலதிக அரசாங்க அதிபர், தொழிற்சாலையின் நிர்வாகத் தலைவர் பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட உயர் அதிகாரிகள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்

இந்தத் தொழிற்சாலை அமைக்கப்படுவதன் மூலம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஒரு ஆடைத் தொழிற்சாலை ஓமந்தையில் நிர்மாணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் இது தொடர்பான கட்டட வேலைகளும் ஆரம்பிக்கப்படுமென அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

வடக்கே யுத்தமற்ற சூழல் நிலவுவதினால் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழில் வாய்ப்பினை வழங்கும் நோக்குடன் பாரிய முதலீட்டுத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுமதியுடன் இந்த திட்டங்கள் யாவும் முன்னெடுக்கப்படுகின்றன.

ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக்காலத்தில் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு ஆடைத்தொழிற்சாலைகளும் மூடப்பட்டு பலர் தொழில்வாய்ப்பை இழந்திருந்தனர். இவர்கள் இந்த தொழிற்சாலையில் இணைந்துகொள்ள முன்னுரிமை அளிக்கப்படுமென 'தெரிவிக்கப்படுகின்றது.

# உலக பொருளாதார நெருக்கடியிலும் வங்கி முறைமை பாதுகாக்கப்பட்டுள்ளது

## -ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு-


(கொழும்பு)

உலக பொருளாதார நெருக்கடியில் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா வங்கி கட்டமைப்புக்களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், நாட்டின் வங்கி முறைமையினை பாதுகாப்பதற்கு அரசாங்கத்தால் முடிந்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரச வங்கியொன்றின் புதிய முகாமைத்துவ பயிலுனர்களுக்கு நியமனக்கடிதங்களை வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந் நிகழ்விலேயே அவர் இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், 30 வருடகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தினை கட்டியெழுப்பும் சவாலுக்கு அரசாங்கம் தற்போது முகங்கொடுத்துள்ளது.

அரச வங்கியினை தனியார் மயப்படுத்தும் நிலைமை அண்மையில் காணப்பட்டது



அதிலிருந்து மீண்ட குறித்த வங்கி தற்போது இலாபத்தை ஈட்டிக்கொள்ளும் நிலையை அடைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் 300 பட்டதாரிகளுக்கு ஜனாதிபதியால் நியமனங்கள் வழங்கப்பட்டன.

# வாக்காளர் எண்ணிக்கை அதிகரித்தால் நாடாளுமன்ற ஆசன எண்ணிக்கை அதிகரிக்கும்

## தேர்தல் ஆணையாளர் சுறுகின்றார்

(கொழும்பு)

வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையை மீளவும் உயர்த்த முடியும் என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

2010ம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் மூன்று இலட்சத்து 20ஆயிரம் யாழ்ப்பாண வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாகவே நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை குறைக்க வேண்டியேற்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

மிக நீண்ட காலமாக 1989ம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட்டு வந்தன அரசியல் சாசனத்தின் அடிப்படையிலேயே நாடா



ளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையை வரையறுத்ததாகத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்ற வாக்காளர்கள் மீள் குடியேறினால் மீளவும் ஆசனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சர்வதேச நாடுகள் தடைகளை விதித்தால் இடம்பெயர்ந்தவர்களே அதிகம் பாதிக்கப்படுவர்



## -கூறுகின்றார் கோத்தபாய ராஜபக்ஷ-

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகள் தடைகளை விதித்தால் அதன் மூலம் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களே அதிகம் பாதிக்கப்படுவர் என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டை தனிமைப்படுத்தி, அபிவிருத்திப் பணிகளை முடக்கும் நோக்கில் சில சக்திகள் செயற்பட்டு வருகின்றன.

குறிப்பாக சனல்4 ஊடகம் இவ்வாறான போலிப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றது.

துரதிஷ்டவசமாக இவ்வாறான குற்றச்சாட்டுக்களின் பாதக விளைவுகள் யுத்த இடம்பெயர் மக்களை அதிகமாகத் தாக்கும்

அரசாங்க எதிர்ச் சக்திகள் போராட்டங்களை நடத்தி வரும் வலுவான இராணுவங்கள் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற உலகின் பல நாடுகளில் இடம்பெற்று வரும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் மௌனம் காத்து வருகின்றன.


சமாதானத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற காரணத்தினால் அரசாங்கம் தொடர்ந்தும் விழிப்புடன் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்

# குகநாதன் மீதான தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

**உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்ககோன் தெரிவித்துள்ளார்.**



இந்நிலையில் நடமாடும் பாதுகாப்பு பிரிவினரை ஈடுபடுத்தி பாதுகாப்பைப் பலபடுத் தியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்

இத்தாக்குதலை ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டித்துள்ள அதே வேளை, இந்தத் தாக்கதல் மூலம பத்திரிகை சுதந்திரத்திற்கு பாரிய அச்சுறுத்ததல் விடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் கொள்கை வகுப்பு பணிப்பாளர் பசில் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

தாக்குதல் தொடர்பில் உடனடி விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுப்பதோடு, ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.



கொக்கிளாய் ஆரம்ப வைத்தியசாலைக்கான நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அதற்கான வேலைகள் நடைபெறுவதனை படத்தில் காணலாம் (17)

# பல்கலை கல்விப்பிரிவு பிரதானிகளுக்கு புதிய நியமனங்கள் வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விப் பிரிவின் பிரதானிகளுக்கு மீண்டும் புதிய நியமனங்கள் வழங்கப்பட வேண்டுமென பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மஹிம் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

புதிய நியமனங்கள் வழங்கப்படாத பட்சத்தில் மீண்டும் பல்கலைக்கழக நிர்வாக நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படும் நிலைமை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் கல்விப் பிரிவு பிரதானிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இராஜினாமா கடிதங்கள் பல்கலைக்கழக நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்படவில்லை எனவும், இதனால் புதிய நியமனங்களை வழங்கத் தேவையில்லை எனவும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் கடந்த வியாழக்கிமை உபவேந்தர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டதாகவும், அதன் போது நியமனக் கடிதங்கள் வழங்கப்படமாட்டாதென அறிவிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# எயிட்ஸ் வைரஸ் தொற்றலை தடுக்க வெளிநாட்டு நிதியுதவியில் விழிப்புணர்வு

(கொழும்பு)

வெளிநாட்டு நிதியுதவியுடன், அடுத்த 5 வருடங்களில், பாலியல் தொழிலில் ஈடுபட்டு வரும் 4 ஆயிரத்து 800 பேருக்கு, எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் வைரஸ் உடலில் தொற்றுவதை தடுப்பது தொடர்பாக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படும் என மருத்துவர் லிலானி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் 40 ஆயிரம் பேர் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருவதுடன், இவர்களில் பெருபாலானவர்கள் கொழும்பு நகரில் வசித்து வருகின்றனர் வருடாந்தம் சுமார் ஆயிரம் பேர் பாலியல் தொழிலாளர்கள் தமது உடலில் எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் வைரஸ் தொற்றியுள்ளதா என்பதை பரிசோதிக்க தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்குச் செல்கின்றனர்.

எயிட்ஸ் வைரஸ் உடலில் தொற்றியுள்ளவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபட தடைவிதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தொடருந்தும் பாலியல் தொழிலில் ஈடுபடுவதன் மூலம் அவர்களுடன் உறவு வைத்து கொள்ளும் பெருபாலானவர்களுக்கு எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் தொற்றும் ஆபத்து உள்ளது. இதன் காரணமாக இவர்களுக்கு பாலியல் தொழிலில் ஈடுபட தடைவிதிக்கப்பட்டுள்ளது எனவும் லிலானி ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டு பணத்தை கடத்தமுயன்றவர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை

(கொழும்பு)

வெளிநாட்டு பணத்தை சட்டவிரோதமாக இந்தியாவுக்கு கொண்டு செல்ல முயற்சித்த நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க பிரிவினரால் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 200 குவைத் தினார் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணம் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் பின்னர் நபர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டதாகவும் சுங்க அத்தியட்சகர் பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்தார்.

இந்த பயணி இந்தியாவின் சென்னை நோக்கி பயணிக்க விருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இந்த நபரிடமிருந்து பெறப்பட்ட பணத்தின் பெறுமதி இலங்கை ரூபாவில் 8 இலட்சத்து 97 ஆயிரம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# நிர்மாணப் பகுதிகளுக்கு அண்மையில் விபத்துகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நிர்மாணப் பணிகள் இடம்பெறும் பகுதிகளுக்கு அண்மையில் இடம்பெறும் விபத்துக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு குறிப்பிடுகிறது.

இதற்கமைய அந்தத் துறையில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் பொறியியலாளர்களை தெளிவுபடுத்தும் விசேட திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் கைத்தொழில் பரிசோதனை பிரிவின் ஊடாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கான இழப்பீடுகளை வழங்குவது தொடர்பிலும் இந்த திட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது

# விளம்பரப் பதாகை வீழ்ந்து மார்பக எலும்பு உடைந்தது

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத்தேர்தலுக்காக கட்டப்பட்டிருந்த விளம்பரப் பதாகை தற்போது வீசிவரும் காற்றினால் அறுந்து வீதியால் சென்று கொண்டிருந்தவர் மீது விழுந்ததனால் அவரது மார்பக எலும்பு உடைந்தது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் வசாவிளானைச் சேர்ந்த கு.சிவநேசன் (வயது 39) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி நபர் ஊர்காவற்துறை பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வருகின்றார் எனவும் அலுவலகத்திற்குச் செல்வதற்காக அதிகாலை புன்னாலைக் கட்டுவன் சந்திப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருக்கும் போது குறித்த விளம்பரப் பதாகை தற்போது வீசிவரும் காற்றினால் தூக்கி வீசப்பட்டு விபத்து இடம் பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது. (எஸ்)


# வீட்டு மதிற்சுவர் வீழ்ந்து மாணவன் படுகாயம்

(புங்குடுதீவு)

பாடசாலை மாணவன் மீது வீட்டு மதிற்சுவர் வீழ்ந்து பலத்த காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று காலை 10.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அ.கனிஸ்ரன் (வயது11) என்பவரே பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)



ஆடி அமாவாசை தினமான நேற்றையதினம் பிதிர்க்கடன் செலுத்துவதற்காக கீரிமலையில் பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் ஒன்று கூடினர். அத்துடன் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து தீர்த்தம் ஆடுவதற்கு, சென்ற முருகப் பெருமான், வள்ளி,தெய்வானை சகிதம் தீர்த்தம் ஆடி மண்டபத்தில் இளைப்பாறுவதையும், கீரிமலைக் கடலில் பிதிர்க்கடன் செலுத்துவோர் நீராடுவதையும், அந்தணருக்கு, பிதிர்க்கடன் செலுத்துவதனையும் காணலாம்.

## விசேட தேவை உடையவர்களை வலுப்படுத்தும் செயற்றிட்டம்

(உடுவில்)

விசேட தேவை உடையவர்களை வலுப்படுத்தும் செயற்றிட்டமொன்று உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டன.

உடுவில் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் சமூகசேவை அலுவலர் எஸ்.சுரேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தேசியமொழிகள் சமூக மேம்பாட்டு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ்.எல்.எம்.ஹாசிம், சமூக சேவைகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் எம்.சி.எல்.பெர்ணான்டோ மற்றும் வளவாளர்களாக எம்.ஆர்.சாந்தகுமார், மாசா பண்டார, நிலுகா கேதீஸ்வரன், யாழ். மாவட்ட இணைப்பாளர் என்.ஜனனி ஆகியோரும் கலந்துகொண்டனர். இச்செயலமர்வில் விசேட தேவைப்பாடு உடையவர்களுடன் அவர்களை பராமரிப்பவர்கள் மற்றும் சமுதாயமட்ட புனரவாழ்வுத் தொண்டர்களுமென சுமார் 80இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு ஓதியமலை மக்கள் கோரிக்கை

(நெடுங்கேணி)

நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஒதியமலை கிராமத்திற்கான பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இப்பிரதேசத்தில் சுமார் 30 குடும்பங்கள இடம்பெயர்ந்த நிலையில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இம்மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுவதால் தமது அன்றாடப் பொருட்களை பெற்றுக்கொள்ள நீண்ட தொலைவில் உள்ள நெடுங் கேணிக்குச் செல்லவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

அதனால் இக்கிராமத்திற்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## வலிகாமம் வலயப் பாடசாலைகளின் தமிழ்மொழித் தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

(உடுவில்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்று முடிந்த தமிழ் மொழித் தினப் போட்டி முடிவுகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும், வலய மட்ட தமிழ் மொழித்தின விழாவும் நடைபெறவுள்ளன.

இவ்விழா இன்று மு.ப. 9 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவிற்குப் பிரதம விருந்தினரா்க தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரட்ணம், சிறப்பு விருந்தினராக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் சி.சிவலிங்கராசா கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பரிசளிப்பு விழாவைத் தொடர்ந்து போட்டியில் முதலிடங்களைப் பெற்ற மாணவர்களது கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. சிறப்பாக சிந்து நடைக்கூத்து, நாட்டிய நாடகம் என்பன நடைபெறும்.

(06)

## "மண்ணின் மகிமை" காணி உரித்து கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம்

(கிளிநொச்சி)

வடக்குக், கிழக்கு மாகாணங்களில் காணி தொடர்பான பிரச்சினைகளை தீர்வு காணும் வகையில் காணி தொடர்பான முகாமைத்துவத்தை விதிமுறைப்படுத்தும் மண்ணின் மகிமை என்னும் காணி உரித்துப் பதிவுக்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி கரைச்சி உதவி அரசாங்க அதிபர் செயலகத்தில் இடம்பெற்றது.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்பு, வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பெருமளவு காணி தொடர்பான பிரச்சினைகள் அதிகளவில் அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனைக் கருத்தில் எடுத்து காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட பிரேரணை அமைச்சரவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன்படி காணி தொடர்பான பிரச்சினையில் காணப்படுபவர்கள் கிராம அலுவலரிடம் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து பிரதேச செயலாளர்களிடம் சமர்ப்பித்து தீர்வினைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர், வடமாகாண காணி ஆணையாளர், மாவட்ட அரச அதிபர் திருமதி, றூபாவதி கேதீஸ்வரன், கரைச்சி உதவி அரச அதிபர் நாகேஸ்வரன், காணி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (29)

## காசநோயினால் பாதிக்கப்படுவோர் குடாநாட்டில் அதிகரித்துள்ளனர்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தில் காசநோயினால் பாதிக்கப்படுவோர் தொகை அதிகரித்து செல்வதாகவும் இவ்வருடம் யூலை மாதம் வரை 60 முதல் 70 வரையான நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

3 கிழமைக்கு மேலாக இருமல், இரவில் காய்ச்சல், சளியுடன் இரத்தம் போதல், மருந்து எடுத்தும் மாறாத காய்ச்சல் ஆகிய அறிகுறிகள் இருப்பின் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும். கண்பரிசோதனை மற்றும் எக்ஸ்றே கதிர்ப் படப்பிடிப்பை மேற்கொண்டு நோய் இனங்காணப்பட்டால் 6 மாதத்திற்கு சிகிச்சை எடுப்பதன் மூலம் காசநோயை முற்றாக இல்லாது ஒழிக்க முடியும்.

யாழ்.மாவட்டத்தில் இந்நோய் முற்றிய ஒருவர் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவருக்குச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. நோய் அறிகுறிகள் இனங்காணப்பட்டால் அது அவருடைய குடும்பத்தாருக்குப் பரவக்கூடிய வாய்ப்பு அதிகம் காணப்படுவதால் உடனடியாகப் பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது. எனவே காசநோய் அறிகுறி காணப்படுவோர் உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று பரிசோதனையை மேற்கொள்ளுமாறு அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (11)

## வலிகாமம் வலயப் பாடசாலை மட்ட தமிழ்மொழித் தினப் போட்டி முடிவுகள்

(மருதனார்மடம்)

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற தமிழ் மொழித் தினப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களின் விபரம் வருமாறு-

**இசை - குழு 1**

முதலாமிடம - யாழ்.உடுவில் மகளிர் கல்லூரி (இ.கெளேனியா, இ.லியோரின், ம.அட்சயா, த.ஆரணி, சி.சியானுகா, பா.கிஷாந்தி, ம.நிவேதா, ஸ்.பிறின்சி, த.தேவஅமிர்தா, உ.அனாக்சிகா).

இரண்டாமிடம் - இணுவில் மத்திய கல்லூரி (வி.கலயாணி, க.விவேகா, க.நிதுஜா, சி.ராஜ்கவிதன், ச.அஜீவன், க.மதுரா, மு.சுவாகி, சி.கீர்த்திகா, வி.விஸ்ணுகா).

மூன்றாமிடம - யாழ்ப்பாணக் கல்லூரி (கு.ஷாமினி, கு.டிசாயினி, நி.அமண்டா, அ.மாறிவினோதினி, சி.சங்கீதா, உ.தர்சனா, தி.பெலிக்ஸ், சொ.டிசாந்தன், ய.ஆதித்தன், லோ.ஸ்ரீஹர்சன்).

**இசை - குழு 2**

முதலாமிடம - சங்கானை சிவப்பிரகாச ம.வி (நா.மதுசன், த.விதுசன், உ.உசானா, ந.றஜிந்தா, க.சர்மிலா, ஜெ.சங்கீதா, சி.துளசிகா, ஜெ.துளக்ஜா, ப.கிருஷ்ணராணி, ந.அஜந்தா).

இரண்டாமிடம் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (செ.சதீஸ்வரி, ப.சிவப்பிரியா, ப.டெசிந்தா, ச.குகநர்சி, ச.பிரியங்கா, க.சிதம்பரபாலினி, த.விந்துகா, மா.கோபிகா, சி.சோபனா, ஹர்சினி).

மூன்றாமிடம - உடுவில் மகளிர் கல்லூரி (ஷா.ரெரன்சியா, க.சத்தியா, ம.தரணிகா, சு.டிலாஎன்சிகா, க.மிதுளா, அ.சிவமலர், சு.யூலியற், செ.செல்வராசா, ஸ்ரீ.ஸ்ரீதுளசியா, இ.ஜெறோமினா).

**நடனம்**

முதலாமிடம - உடுவில் மகளிர் கல்லூரி (த.பரிவர்தினி, ர.துர்க்கா, அ.செளயன்னா, தி.சாருகர், நா.தானுஜா, செ.ரிசாங்கி, க.டிசாயினி, உ.அர்ச்சயா, சி.திலக்சிகா, ரா.டினாஜ்சிகா, அ.கொலன்சிகா).

இரண்டாமிடம் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (ச.மதுகரி, சு.மோகனப்பிரியா, சி.கலைச்சனா, இ.கீர்த்தனா, ஜெ.ஜெயலக்சி, க.கயானி, ஐ.ஜெயமதி, சி.தர்மிகா, தி.வாசுகி, சி.நிலானி, நா.நாகபூசணி, த.துஷ்யந்தி).

மூன்றாமிடம - மகாஜனாக் கல்லூரி (ந.உமாபதி, ந.அபிராமி, ம.சகானா, ஜெ.விணுசாயினி, ம.சிந்துகா, ச.பானுஷா, சி.சபிதா, வெ.நிரோஜா, சி.வர்ணிகா).

**நாட்டிய நாடகம்**

முதலாமிடம - இணுவில் மத்திய கல்லூரி (க.பவன், ப.உமேசன், க.கலையரசன், மு.திசோகரன், சி.செங்கோன், வி.வானதி, க.நிவேதா, பொ.இமையாளினி, இ.பிரவீனா, வி.விஜிதா, ஜெ.ஆதித்தியா, சி.கம்சா).

இரண்டாமிடம - இராமநாதன் கல்லூரி (றி.டக்னா, வி.பானுசா, ச.ஹிஷதயா, ச.நிஷாந்தினி, அ.நிரஜா, க.சோபிதா, சி.சுகன்யா, க.தனுசிகா, த.செளமினி, த.சஞ்சினி, பா.காயத்திரி).

மூன்றாமிடம் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (த.பாதுஜா, ஜெ.கஜனா, ச.லாவண்யா, அ.அபர்ணா, தி.சுஜிக்கா, த.நிதுஜா, ந.அபிராமி, தே.அனித்தா, அ.வனிதா, பா.ரூபினி, இ.கார்த்தி காயினி, ச.சாமினி).

**நாட்டார் பாடல்**

முதலாமிடம - மானிப்பாய் மகளிர் கல்லூரி (கி.கதிஜா, த.குகப்பிரியா, கு.கிருஷாந்தினி, பா.பவுகியா, ச.சங்கீதா, ஸ்ரீ.சாமினி).

இரண்டாமிடம் - வட்டு.மத்திய கல்லூரி (வ.கஜேந்திரன், சி.டக்சன், ச.லோசினி, தி.சுகந்தினி, சி.ஹார்த்தினா).

மூன்றாமிடம - வசாவிள்ளான் ம.ம.வி (கோ.மோகன்யா, ச.மேனகா, சி.தியானிதா, உ.கயன்சிகா, இ.கிரிஜா, வி.நிர்மலா).

**மேடை நாடகம்**

முதலாமிடம - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி (வி.விஜயரூபன், கு.துஸ்யந்தன், வீ.கதீசன், மு.நிதுபன், லோ.கிரிசங்கர், ர.பிரணவன், சி.லையிஸன், தெ.டெனசிந்தா, பே.வுசா, லோ.அன்றகேஷகா, மு.சரண்ஜா, த.மோயாளினி).

இரண்டாமிடம் - யாழ்ப்பாணக கல்லூரி (வி.ஜெயக்குமார் வசந், ச.தர்சிகா, இ.இலக்கியா, பா.தனுஜா, க.உமாசுதன், பா.கஸ்காதரன், இ.தர்சன், த.அபர்ணா, இவான் ஜலின்)

மூன்றாமிடம - உடுவில் மகளிர் கல்லூரி (ம.தர்சிகா, அ.நிலானி, ம.மகீசா, அ.வஸ்தி, ரா.பியூலா, ர.அம்சத்வேணி, ரா.நிலோஜினி, செ.டொறினி சுஜீவா, லி.டிலானி ஏஞ்சல், சி.அபிராமி, கு.ஜெனற்றொசலின், மு.அம்பாலிகா).

**விவாதம்**

முதலாமிடம - இணுவில் மத்திய கல்லூரி (சி.சிந்துஜா, கு,தயாளினி, ப.சங்கீதா).

இரண்டாமிடம - இளவாலை ஹென்றியரசர் கல்லூரி (மோ.அஜந்தன், பா.வக்சன், பா.யசோதரன்).

மூன்றாமிடம் - யாழ்ப்பாணக் கல்லூரி (பு.வைஷ்ணவன், சி.நிறோஜன், இ.காயித்திரி).

**வில்லுப்பாட்டு**

முதலாமிடம் - தெல்லிப்பளை யூனியன் கல்லூரி (அ.சங்கர், நிரோசன், பவீந்திரன், பிரதாஸ், சாயிசங்கர், பிரியங்கன், சதுர்சன்).

இரண்டாமிடம - இளவாலை ஹெனறியரசர் கல்லூரி (பா.யசோதரன், ச.குயிந்தன், பா.லக்சன்).

மூன்றாமிடம் - யாழ்ப்பாணக் கல்லூரி (சி.சுரேஷ்குமார், த.ராகுலன், று.நிதர்சன், சா.சுலக்ஷன், தே.தேவதாஸ், சி.அபியேஸ், ச.பிரார்தீபன்).

**தமிழறிவு வினாவிடை**

முதலாமிடம் - மகாஜனாக் கல்லூரி (வி.கல்யாணி, இ.மருந்தா, செ.சுவேதா, க.யறூசனா, சி.மகிழினி)

இரண்டாமிடம - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி (இ.ரேணுகா, மா.ராகினி, செ.ரெஜினா, ப.சர்மிளா, க.தவராசா).

மூன்றாமிடம் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி. (06

# அதிகரித்த மவுசு



பிரித்தானியாவின் சுப்பர் மாக்கெட்டுக்களில் நெருப்புக் கோழி முட்டைக்கு மவுசு அதிகரித்து வருகின்றது. நெருப்புக் கோழியின் ஒரு முட்டை இலங்கை ரூபாவின் பெறுமதியில் 3600 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

பறவைகளில் நெருப்பு கோழியின் முட்டைதான் பெரிதாக கருதப்படுகிறது. சுமார் அரை அடி உயரம், ஒன்றரை அடி சுற்றளவு இருக்கும்.

கிட்டத்தட்ட முட்டைக்கோஸ் மரக்கறிக்கு இணையான அளவில் ஒரு முட்டையே 2 கிலோ இருக்கும். பிரித்தானியாவில் தற்போது நெருப்புக் கோழி முட்டை விற்பனையில் பெரிய நிறுவனங்களும் இறங்கியுள்ளன.



வெளிப்புற சூழ்நிலை வெப்பமாக இருக்கும்போது மட்டுமே நெருப்பு கோழி முட்டையிடும்.

நெருப்பு கோழியின் ஒரு முட்டையான கோழி முட்டை போல 24 மடங்கு பெரியது. இதன் ஒரு முட்டையை வைத்து 15 பேருக்கு முட்டைப் பொரியல் செய்யலாம்.

கோழி, வாத்து முட்டையை விட நெருப்பு கோழி முட்டை ருசி அதிகம் இருப்பதால் குழந்தைகள் விரும்பி சாப்பிடுகிறார்கள். ஆனால், முட்டையை அவிப்பதற்கு தான் ஒன்றரை மணி நேரம் ஆகிறது.

பீங்கான் கோப்பை போல முட்டையின் ஓடு உறுதியாக இருக்கிறது. டிரில்லிங் மெஷினால் துளைத்தால் கூட சிறிது நேரம் தாக்குப்பிடித்த பிறகே ஓடு உடைகிறது.

# வித்தியாசமான இரட்டைக் குழந்தைகள்



இரட்டைக் குழந்தைகள் என்றால் அடையாளம் காண முடியாத அளவு இரு குழந்தைகளும் ஒரே மாதிரியாக இருக்கும். முகத் தோற்றம் அனைத்தும் ஒரே மாதிரியாக இருக்கும் என்பது தான் பொதுவாக நிலவி வரும் கருத்து.

இரட்டைக் குழந்தை என்றால் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என அர்த்தம் இல்லை என்பதை தருண் மற்றும் கிளன் என்ற இரட்டை சகோதரர்கள் நிரூபித்து உள்ளனர். தருண் சின்ன தம்பியாக 11 பவுண்ட் எடையுடனும் கிளன் 20 பவுண்ட் எடையுடன் உள்ளனர்.

இந்த இரட்டை குழந்தைகள் கடந்த ஆண்டு ஜுலை மாதம் பிறந்தனர்.

தருணுக்கு நுரையீரலில் திரவம் சேர்ந்து இருக்கும் அரிய வகை நோய் காணப்பட்டது. இதனால் அந்த குழந்தை ஒரு ஆண்டு வரை மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டியதாயிற்று. கடந்த டிசம்பர் மாதம் தருண் அபாய நிலை அடைந்தபோது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டான்.

தற்போது இரண்டு குழந்தைகளும் தங்களது முதல் பிறந்த நாளை கொண்டாடிய நிலையில் பெற்றோர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.


# குகைக்குள் ரயில் பாதை



17 ஆம் நூற்றாண்டில் Johann Weichard Valvasor என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட இந்த Postojna என்ற குகை Pivka நதியின் மேல் அமைந்துள்ளது. ஜரோப்பாவின் பிரபலமான இந்த குகையை சுற்றி பார்க்க, குகைக்குள் 5.3 கிலோமீற்றர் நீளமுள்ள ரயில் பாதை அமைக்கப் பட்டுள்ளது.

# கடலுக்குள் மூழ்கிய உலகம்

ஸ்கொட்லாந்தின் வடக்குக் கரையருகே வட அட்லாண்டிக் பெருங்கடலின் ஆழத்தில் வீழ்படிவாய் பாரிய நிலப்பரப்பு இருப்பதை புவியியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். இது மிகவும் பண்டைய உலகமாய் இருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். சுமார் 56 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் இப்பாரிய நிலப்பரப்பில் நதிகளும் முன்பு மலைகளாக இருந்தவற்றின் மிச்சங்களாய் நில உச்சங்களும் இருந்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றன.




அவை ஒரு கடற்கரை நாட்டின் வரைபடம் போனறு காட்சியளிப்பதாகவும், இந்தப் படிவுகள் கடற்படுக்கையின் கீழே இரண்டு கி.மீ தொலைவில் பாதுகாக்கப்பட்டுள்ளன என்றும் நில ஆய்வியல் மூத்த அறிஞர் நிக்கி வைய்ட் தெரிவித்துள்ளார்.

மேம்படுத்தப்பட்ட எதிரொலி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செய்யப்பட்ட இந்த ஆய்வின் மூலம் சுமார் 10,000 ச.கி.மீ பரப்பளவு கொண்ட இப்பாரிய நிலப்பரப்பு கண்டறியப்பட் டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

# கண்களை இமைக்கக் காரணம்



மழை அல்லது பனியின் போது கார், பஸ்சில் சென்றால் கவனித்திருக்கலாம். அப்போது ஹைவைப்பர் அசைந்து கண்ணாடி மீது விழும் நீர்த் துளிகளைத் துடைத்து டிரைவர் தெளிவாகப் பார்க்க உதவும். ஆனால் எந்த ஹவைப்பரும் நம் கண் இமைகளுக்கு நிகராகாது. நம் கண் இமைகள் மேலும் கீழும் அசைந்து வைப்பரை போல் பணிபுரிகின்றன. மெல்லிய தோலால் ஆன இமைகள் நமது பார்வையைத் தடுக்காதபடி அவ்வளவு வேகமாக அசைகின்றன. இமைகள் தாமாகவே தமது பணியைச் செய்கின்றன. ஆறு வினாடிகளுக்கு ஒருமுறை நாம் இமைக்கிறோம். அதாவது ஒரு மனிதன் தன் வாழ்நாளில் இரண்டரைக் கோடி முறை இமைக்கிறான்.

இமைப்பது ஏன் முக்கியமானது? இமைப்பது கண்களை எவ்வாறு பாதுகாக்கிறது? இமையில் உள்ள முடிகள் விரிவாக அமைந்தவை.

அதன் பணி, தூசுகள் கண்ணில் விழாமல் பாதுகாப்பதே. மழை பெய்யும்போதோ, காற்று மணலைச் சுற்றி வீசும்போதோ இமைகள் தாமாகவே மூடிக்கொள்கின்றன. மழைநீர், வியர்வை ஆகியவை கண்களில் விழாமல் ஒரு பக்கமாக வடியும்படி புருவங்கள் தடுப்பாக இருக்கின்றன. மேலும், இமைப்பதால் கண்கள் ஈரத்துடன் இருக்கவும், எளிதில் சுழலவும் முடிகிறது. கண் இமையோரங்களில் இருபது, முப்பது சிறு சுரப்பிகள் உள்ளன. இமைகளுக்கு இடையே இவற்றின் திறப்பு அமைந்துள்ளது. கண் இமைகள் மூடும்போது இந்தச் சுரப்பிகள் நீரைச் சுரக்கின்றன. இந்த நீர், கண்களுக்கு நன்மை பயக்கிறது. கண்ணீர்ச் சுரப்பியில் உள்ள கண்ணீர் இவ்வாறுதான் பயன்படுகிறது. அதனால் ஒவ்வொரு முறை இமைக்கும் போதும் நாம் அழுகிறோம் என்றே கூறலாம்.

# குழந்தையை கண்டறிய இணையம்

எல்லோருக்கும் எதிர்காலம் பற்றி அறிய ஆசை அதனால் தான் ஜாதகத்தை எடுத்துகொண்டு ஜோதிடர் வாசலை தட்டுகிறோம். தங்களுக்கு பிறக்கும் குழந்தை எப்படி இருக்கும் என்று நானறிந்த வரை எந்த ஜோதிடரும் சொல்லியதில்லை உங்களின் குழந்தையின் குணத்தினை வேண்டுமானால் ஜோதிடர் சொல்லலாம். பிறக்கப்போகும் குழந்தை ஆணா பெண்ணா வைத்தியர் சொல்லலாம் இதோ இநத இணையம் தருகிறது உங்களுக்கு பிறக்கும் குழந்தையின் முக தோற்றத்தை.

இதற்கு உங்களின் புகைப்படமும் உங்கள் மனைவி அல்லது கணவனின் புகைப்படமும் அல்லது காதலர்கள் ஆயின் காதலர்கள் இருவரின் புகைப்படங்களை இந்த தளத்தில் கொடுத்து உங்களின் எதிர்கால வாரிசின் அழகிய தோற்றத்தை காணலாம் .

முதலில் தளத்தில் சென்று உங்களின் படங்களை ஒவ்வொன்றாக UPLOAD செய்யுங்கள் படத்தின் முகத்தினை மட்டும் தளத்தில் தெரிவு செய்யுங்கள். பின்னர் உங்கள் குழந்தைக்கு நீங்கள் சூட்ட விரும்பும் பெயரை குறிப்பிட்டு நிறத்தினையும் குறிப்பிட்டு PROCEED எனபதை கிளிக் செய்தால் போதும். உங்கள் குழந்தயின் தோற்றத்தை காணலாம்.

தள முகவரி இங்கே:- http://www.makemebabies.com/

உங்கள் குழந்தையின் தோற்றத்தை கண்டதும் கடுப்பாகி கமெண்ட் பண்ணாதிங்கப்பா. இது ஒரு வேடிக்கையான தளம் நண்பர்களே! சில வேளைகளில் சரியாகவும் வரும் முயற்சி செய்து பாருங்களேன்

# குரலை மாற்ற...

ஒரு ஆண் பேசும் குரலை நேரடியாக ஒரு பெண் பேசும் குரல போல் மாற்ற உதவும் இலவச மென் பொருள்பற்றித்தான் இந்தப்பதிவு.ஆண்கள் பேசும் குரலும் பெண்கள் பேசும் குரலும் தனியாக தெரியும் ஆனால் மொபைல் போன்களில் ஆண்கள் பேசும் குரலை அப்படியே பெண்கள் பேசுவது போல் மாற்ற ஏற்கனவே பல மென்பொருட்கள் உள்ளன, ஆனால் கணினியில் ஆண்கள் பேசும் குரலை அப்படியே நேரடியாக பெண்கள் பேசுவது போல் மாற்ற ஒரு மென்பொருள் உள்ளது.

தறவிரக்க முகவரி:- http://www.screamingbee.com/product/MorphVOXJunior.aspx

மேலே கொடுத்திருக்கும் முகவரியை சொடுக்கி இந்த மென் பொருளை இலவசமாக தறவிரக்கி நம் கணினியில் நிறுவலாம். மென்பொருளை இயக்கி யாருடைய குரலில் கேட்க வேண்டுமோ அதை தேர்ந்தெடுத்து நாம் பேசினால் போதும், உதாரணமாக ஒரு ஆண் பேசும் போது பெண் குரலை தேர்ந்தெடுத்துவிட்டு பேச ஆரம்பித்தால் அது பெண் பேசுவது போல் இருக்கும். Man, Tiny Folks, Woman என்ற மூன்று விதமான ஆப்சன் இங்கு கொடுக்கப பட்டிருக்கும் இதில் Tiny Folks என்பது கார்டூன் கேரக்டர் பேசுவது போல் இருக்கும். பல சமயங்களில் சாட்டிங்கில் பேசுவது பெண் தான் என்று நினைத்திருப்போம் உண்மையிலே அவர் இது போன்று இருக்கும் மென் பொருளை பயன்படுத்தி தான் பேசிக்கொண்டிருப்பார்.

கணினி மூலை

## -மாணவன் ஒருவர் பலியாகக் காரணமாம்-

# மு.க.ஸ்ராலின் கைதாகி விடுவிப்பு மாவட்டச் செயலர் மீது கொலை வழக்கு

(திருவாரூர்)

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே முன்னாள் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டு பிற்பகல் 2.00மணியளவில் விடுவிக்கப்பட்டுள்ளார். இதன்போது கைது செய்யப்பட்ட மாவட்ட செயலர் கலை வாணனை பொலிஸார் விடுவிக்கமறுத்து விட்டனர். இவர்மீது கொலைக்குற்ற வழக்கு பதியப்பட்டுள்ளது. முன்னாள் துணை முதல்வரான மு.க.ஸ்டாலின் திருத்துறைப் பூண்டி அருகே மொழிபோர் தியாகி தொடர்பான கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நேற்றுமுன் தினம் இரவு தஞ்சாவூருக்கு சென்று நேற்றுக் காலை திருவாரூருக்கு காரில் சென்று கொண்டிருந்தார். திருவாரூர் மாவட்ட எல்லையில், திருத்துறைப் பூண்டி அருகே கோவில்வன்னி என்னும் இடத்தில் அவருக்கு வரவேற்பு கொடுக்க திருவாரூர் மாவட்ட தி.மு.க.செயலாளர் பூண்டி கலைவாணன் உள்ளிட்ட தி.மு.க.வினர் காத்திருந்தனர்.

அங்கே மு.க.ஸ்டாலின் வந்ததும், பொலிஸார் அவரிடம் விசாரணை உள்ளது என்று கூறியுள்ளனர் என்ன என்று ஸ்ராலின் கேட்ட போது சமச்சீர் கல்வியை எதிர்த்து தி.மு.க.வினர் போராட்டம் நடத்திய போது பள்ளியில் இருந்து மாணவர்களை வலுக்கட்டாயமாக பஸ்ஸில் திருப்பி அனுப்பினர். அப்போது, கொரடச்சேரி அருகே பஸ் ஒன்று விபத்துக்கு உள்ளானதில், தி.மு.க.வினரால் திருப்பி அனுப்பப்பட்ட விஜய் என்ற மாணவர் விபத்தில் பலியானார்.

இதற்கு பூண்டி கலைவாணன்தான் காரணம்



என்று குற்றம் சாட்டப்பட்டது. அது தொடர்பாக அவரை விசாரிக்க வேண்டுமென்று கூறினர்.

இதற்கு ஸ்டாலின் எதிர்ப்பு தெரிவித்தார். பூண்டி கலைவாணனை ஒப்படைக்க இயலாது என்று கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து சாலைமறியல் போராட்டமும் நடந்தது. இதனால் ஸ்டாலினையும் சேர்த்து தி.மு.க.வினரை பொலிஸார் கைது செய்தனர். ஸ்டாலினுடன் முன்னாள் அமைச்சர்கள் அழகு திருநாவுக்கரசு, மதிவாணன், எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், விஜயன் எம்.பி. உட்பட சுமார் 300 பேர் கைது செய்யப்பட்டனர்.

# இந்தியாவின் முப்படை தலைவராக கடற்படை தளபதி நியமனம்



(சென்னை)

இந்தியாவின் முப்படைத் தலைமை தளபதிகள் குழுவின் தலைவராக இந்திய கப்பற் படையின் தலைமைத் தளபதி அட்மிரல் வர்மா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் இராணுவத்தில் தரைப்படை, விமானப்படை, கப்பற்படை ஆகியன முப்படைக குழுவில் அடங்குகின்றன.

இவற்றின் தலைமை அதிகாரியாக இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் உள்ளார். இந்த மூன்று படைகளுக்கும் தலைமை தளபதிகள் உள்ளனர்.

இந்த முப்படை தளபதிகள் குழுவின் புதிய தலைவராக இந்திய கப்பற்படையின் தலைமைத் தளபதி அட்மிரல் வர்மா நேற்றுமுன்தினம் பதவியேற்றுக் கொண்டார்.

இராணுவ அமைச்சகத்தின் சார்பில் நடந்த விழாவில் இவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

முன்னதாக முப்படை தளபதிகள் குழுவின் தலைவராக இருந்த விமானப்படை தலைமைத் தளபதி பி.வி.நாயக் பதவி விலகியதை அடுத்து அட்மிரல் வர்மா இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஸ்டாலின் கைதென நாடகம்

(சென்னை)

ஸ்டாலினை நாங்கள் கைது செய்யவில்லை, தானாக முன்வந்து அவர் கைதானதாக நாடகம் நடத்தினார் என்று மாவட்ட எஸ்.பி. செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் ஸ்டாலினை நாங்கள் கைது செய்யவில்லை. மாணவர் ஒருவர் விபத்தில் இறப்பதற்குக் காரணமான சம்பவம் தொடர்பாக மாவட்ட தி.மு.க. செயலர் பூண்டி கலைவாணனிடம் விசாரணை நடத்த வந்தோம். அவரை ஒப்படையுங்கள் என்றோம். அதற்கு ஸ்டாலின் தரப்பு மறுத்ததுடன் தானாகவே சாலை மறியல் போராட்டங்களில் ஈடுபட்டனர்.


தொடர்ந்து கைதாகினர். அவர்களை பாதுகாப்பாக திருவாரூர் அழைத்து வந்தோம். தற்போது, கலைவாணனை மட்டும் விசாரணைக்கு நிறுத்தி வைத்து, மற்றவர்களை விடுவித்துவிட்டோம் என்றார் அவர்.



ஆடி அமாவாசையை முன்னிட்டு நேற்று அதிகாலை பக்தர்கள் சேதுக்கரை கடலில் புனித நீராடி அங்குள்ள ஆஞ்சநேயர் கோயிலில் வழிபடுவதைக் காணலாம்.

# பொய்வழக்குகளை தாக்கல் செய்து விசாரணை என்ற பெயரில் இழுத்தடிப்பு

## -குற்றஞ்சாட்டுகிறார் கருணாநிதி-



(சென்னை)

தி.மு.க.,வினர் மீது பொய் வழக்குகளை தாக்கல் செய்து, விசாரணை என்ற பெயரில் இழுத்தடிக்கின்றனர்'' என, தி.மு.க., தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் பொய் வழக்கு போடுவதில், ஜெயலலிதாவை மிஞ்சுவதற்கு யாருமில்லை என்பதற்கு பல உதாரணங்கள் உண்டு. அவர் எப்போது ஆட்சிக்கு வந்தாலும், உடனடியாக தனக்கு பிடிக்காதவர்கள் எவரையும் விடமாட்டார்.

காஞ்சி சங்கராச்சாரியார், தங்கள் மீது அ.தி.மு.க., ஆட்சியினரால் 2004 ஆம் ஆண்டு போடப்பட்ட வழக்கு பொய் வழக்கு என, நீதிமன்றில் சில நாட்களுக்கு முன்னர் தெரிவித்திருக்கிறார். அவர்கள் மீதே இந்த நடவடிக்கை என்றால், அரசியல்வாதிகள் எம்மாத்திரம்? சென்னை ஆற்காடு சாலையில் உள்ள, எம்.ஜி.ஆர்., நினைவகக் காப்பாளர் முத்து, நீதிபதி ஒருவர் மருமகன் கஞ்சா வைத்திருந்ததாகவும், ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் சுதாகரன் “ஹெரோயின்“ வைத்திருந்ததாகவும் வழக்குகள் போடப்பட்டன.

கடந்த 2001ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்திலேயே, சென்னையில் மேம்பாலம் கட்டியதில் தவறு என, என்னை நள்ளிரவில் கைது செய்தனர். இதே மேம்பாலங்களைக் காட்டி ஸ்டாலினை கைது செய்தனர். இப்போது ஆட்சிக்கு வந்ததும், நில அபகரிப்பு என்ற கற்பனையான காரணத்தைக் காட்டி, எதிர்க் கட்சியினரைப் பழி வாங்க, குற்றம் சுமத்திடும் செயலைத் ஆரம்பித்துள்ளனர். இந்த வகையில் தான், அமைச்சர்களாக இருந்த வீரபாண்டி ஆறுமுகம்,நேரு,பெரியசாமி, மதுரை மாவட்டச் செயலர் தளபதி மற்றும் கழகத்தினர் மீது பொய் வழக்குகளைப் போட்டு, விசாரணை என்ற பெயரில் இழுத்தடிக்கின்றனர் என்றார்.

# கலைஞர் தொலைக்காட்சி சொத்துக்களை பறிமுதல் செய்ய நடவடிக்கை

(சென்னை)

சட்ட விரோத பணப்பரிமாற்றத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கலைஞர் தொலைக்காட்சியின் சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கான நடவடிக்கைகளை, அமுலாக்கத் துறை இயக்குனரகம் ஆரம்பித்துள்ளது என, அந்தத் துறையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.




இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது: கலைஞர் தொலைக்காட்சிக்கு 215 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள், சென்னை உட்பட, தமிழகத்தின் பல பகுதிகளில் இருப்பது தெரிய வந்துள்ளது. அதனால், சட்ட விரோத பணப்பரிமாற்ற தடுப்புச் சட்டத்தின் கீழ், அவற்றைப் பறி முதல் செய்வதற்கான நடவடிக் கைகள் ஆரம்பமாகியுள்ளன.

விதிகளை மீறி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்ததற்காகவும், சிலருக்கு சலுகை காட்டியதற்காகவும்,முன்னாள் மத்திய அமைச்சர் ராஜாவுக்கும், அவரது அணியினருக்கும் பல கோடி ரூபாய் லஞ்சம் கொடுக்கப்பட்டது. அந்த லஞ்சப் பணத்தை மீட்கும் வகையில்,இந்தப் பறிமுதல் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன என்றார்.

# எடியூரப்பாவை விலக்கக் கூடாது பா.ஜ.க.மேலிடத்திற்கு எச்சரிக்கை

## ஓரணியில் 60 சட்டமன்ற உறுப்பினர்கள்

(பெங்களூர்)

கர்நாடக முதல்வராக எடியூரப்பா தொடர வேண்டும் என்று, 60 பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதுடன் தமது கருத்துகளை கேட்காமல், முதல்வரை மாற்றம் செய்யக் கூடாது என, பா.ஜ.க. மேலிடத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர் இந்த அறிவிப்பு கர்நாடக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக சுரங்க ஊழல் குறித்த லோக் ஆயுக்தா அறிக்கையில், முதல்வர் எடியூரப்பா தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாகவும், அதன் மூலம் அரசுக்கு, 16 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாகவும் குறிப்பிடப் பட்டது. இதனால், முதல்வர் எடியூரப்பாவை ராஜினாமா செய்



யும்படி, பா.ஜ.க. மேலிடம் வற்புறுத்தியது.

நீண்ட இழுபறிக்குப் பின், தனது ராஜினாமாக் கடிதத்தை, எடியூரப்பா, பா.ஜ.க. தேசிய தலைவர் நிதின் கட்காரிக்கு அனுப்பி வைத்தார். நள்ளிரவைத் தாண்டிய பின், முதல்வர் பதவியிலிருந்து ராஜினாமா செய்ய முடிவு செய்து விட்டேன். இன்று ராஜினாமாக் கடிதத்தை ஆளுநரிடம் கொடுப்பேன், என்றும் தெரிவித்தார்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .............................. பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# ஈரான் - அல்கொய்தா உடன்பாடு குற்றம் சாட்டுகின்றது அமெரிக்கா

(வொஷிங்டன்)

பயங்கரவாதச் செயல்களுக்கு ஆட்களைத் தேர்வு செய்ய ஈரானும், அல்கொய்தாவும் இரகசிய உடன்பாடு செய்து கொண்டுள்ளதாக அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.

பாரசீக வளைகுடாப் பகுதியில இருந்து ஆட்களைத் தேர்வு செய்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து பின்னர் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானுக்கு அனுப்பித தாக்குதலை நிகழ்த்த அல்கொய்தா பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

அல்கொய்தாவின் இந்த மோசமான திட்டத்துக்கு ஈரானும் உடநதையாக இருக்க ஒப்புக் கொணடுள்ளது. அல்கொய்தா தமது செயலுக்கு ஈரான் மண்ணைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதித்து, அந்நாடு இரகசிய உடன்பாடு செய்து கொண்டுள்ளது என்றும் அமெரிக்காவின் நிதித்துறை குறிப்பிட்டுள்ளது.

அல்கொய்தா முக்கிய தலைவரான அப்துல் ஆசி கலீல் உள்ளிட்டோருடன் ஈரான் உடன்பாடு செய்துள்ளது. இவர்கள் பாரசீக வளைகுடா நாடுகளில் தங்களது பணியைத் தொடங்க மும்முரமாகவுள்ளனர். இவர்களுக்கு அமெரிக்காவில் ஏதேனும் சொதத்துக்கள் இருப்பின் அவை முடக்கப்படும். இந்த பயங்கரவாதிகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கபபடுகிறது என்றும் அமெரிக்காவின் நிதித்துறை தெரிவித்துள்ளது.

# ஆப்கானில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் பேருந்தில் சென்ற 23 பேர் உயிரிழப்பு



ஆப்கானிஸ்தானில் வீதியோரம் நடந்த குண்டு வெடிப்பில் 22 பேர் பலியாகியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் ஹெல்மான்ட் மாகாணத்தில் தேசிய நெடுஞ்சாலை ஒன்றில் ஆட்களை ஏற்றிக் கொண்டுசென்ற மினி பஸ் ஒன்றும், அதன் பின்னால டிராக்டர் ஒன்றும் வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது வீதியோரத்தில் திடீரென வெடி குண்டு வெடித்தில் மினி பஸ் தூக்கி வீசப்பட்டதுடன், பின்னால் வந்த டிராக்டர் முற்றாகச் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் மினி பஸ்சில் வந்த 22 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பலியாகியுள்ளனர்.

இது குறித்து தேசிய பாதுகாப்பு இயக்குனர் கமாலுதீன் கூறுகையில், ஹெல்மான்ட் மாகாணம் தலிபான்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி. சம்பவம் நடந்த இடத்தில் மினி பஸ்சில் குழந்தைகளும் சென்றுள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தலிபான்கள் தாக்குதலில் அப்பாவி மக்கள் பலியாவது அதிகரித்து வருகிறது.

# பாகிஸ்தானில் சுவிஸ் தம்பதி கடத்தல் விடுவிக்க தலிபான்கள் நிபந்தனை விதிப்பு

பாகிஸ்தானைச் சேர்ந்த தலிபான்கள் இரண்டு சுவிஸ் நாட்டு தம்பதியினரை கடத்திச் சென்றுள்ளனர். இதற்காக அமெரிக்காவில் சிறை வைக்கப்பட்டுள்ள பெண் விஞ்ஞானி ஒருவரை நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுளளனர். பாகிஸ்தானில் தலிபான்கள் அமைப்பின் இரண்டாம் கட்ட தலைவராக உள்ள வெலிரூ ரஹ்மான் என்பர் தென்மேற்கு மாகாணத்திற்குச் சுற்றுலா வந்திருந்த இரண்டு சுவிட்சர்லாந்து நாட்டு தம்பதியினரைக் கடத்திச் சென்றுள்ளார்.

அவர்களை விடுவிக்க வேண்டுமென்றால் அமெரிக்க சிறையில் தண்டனை அனுபவித்து வரும் பாகிஸ்தான் பெண் விஞ்ஞானி அபியா சித்திக்கை (வயது-38) விடுதலை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் பிணைக் கைதியாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள சுவிஸ் தம்பதியினரை நாங்கள் எந்தக் கொடுமைக்கும் ஆளாக்கமாட்டோம் என்றும், இதற்கு கைமாறாக உடனடியாக பெண் விஞ்ஞானி அபியா சித்திக்கை விடுவிக்க வேண்டும் எனவும், இல்லையென்றால் சுவிஸ் தம்பதியினரின் உயிரைத் தலிபான் நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியிருக்கும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்கச் சிறையிலுள்ள அபியா சித்திக் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க அதிகாரிகளை கொல்ல முயன்றதாக கடந்த ஆண்டு (2010) செப்ரெம்பர் மாதம் தொடரப்பட்ட வழக்கில் 86 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, தற்போது அமெரிக்கச் சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார்.

# அவுஸ்ரேலிய குடியேற்ற காவல் மையத்தில் அகதிகள் தற்கொலை செய்வது அதிகரிப்பு

அவுஸ்திரேலிய குடியேற்ற காவல் மையத்தில் அகதிகள் தற்கொலை செய்வது அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடியேற்ற காவல் மையங்களில் உள்ள அகதிகள் காயப்படுத்திக் கொள்வதும், தற்கொலை செய்வதும் அடிக்கடி ஏற்படுகினறன. கிறிஸ்மஸ் தீவு பகுதி உட்பட பல மையங்களில் அகதிகளாகப் புகலிடம் தேடுவோர் விபரீத முடிவு எடுக்கின்றனர். இது குறித்து விசாரணை நடத்தப்படும் என அவுஸ்ரேலியா நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. அவுஸ்ரேலியாவின் தீர்வாயத் தலைவர் ஆலன் ஆஷர் கூறுகையில, நீண்ட காலமாக குடியேற்றக் காவல் மையத்தில் வைப்பதால் உளவியல் ரீதியாக புகலிடம் தேடுபவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆயிரக்கணக்கான புகலிடம் தேடும் நபர்கள் தங்களை காயப்படுத்திக் கொள்கிறார்கள். கிறிஸ்மஸ் தீவில் ஜூன் மாத இறுதியில் இது போன்ற 30 சம்பவங்களும், ஜூலை மாதம் முதல் வாரம் 50 சம்பவங்களும் நடந்துள்ளன.

ஏதோ மிகப்பெரிய அளவில் தவறு இருக்கிறது. இந்தப் பிரச்சனைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும். 2010 ஆம ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் இதுவரை புகலிடம் தேடி வந்த 5 பேர் தற்கொலை செய்து உள்ளனர். புகலிடம் தேடி வந்தவர்களில் ஆண்கள் குடும்பத்தில இருந்து பிரித்து வைக்கப்படடுள்ளனர். இதன் காரணமாகவும தற்கொலை மற்றும் காயப்படுத்திக் கொள்வது ஏற்படுகிறது என்றார்.

# ரஷ்யாவில் பரவுகின்றது காட்டுத் தீ அரிய வகை பைன் மரங்கள் நாசம்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் பல பகுதிகளிலும் தொடர்ந்து கொழுந்துவிட்டு எரியும் காட்டு தீயால் ஆயிரக்கணக்கான ஹெக்டேயர் வனப்பகுதியில் உள்ள மரங்கள் எரிந்து சாம்பலானது. ரஷ்யாவின் ரோஸ்டோப் பகுதியில் அண்மைக் காலமாகத் தொடர்ந்து காட்டுத் தீ பரவி வருகிறது. இதன் காரணமாக அரிய வகை பைன் மரங்கள் உள்ளிட்ட காட்டு மரங்கள் தீயில் எரிந்து நாசமானது. வேகமாகப் பரவி வரும் இந்தக் காட்டு தீ ரஷ்யாவின் கிழக்கு பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான ஹெக்டேயர் வனப்பகுதிகளை சேதப்படுத்தியதோடு ஐரோப்பிய நாடுகளுககும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் காட்டு தீயை அணைப்பதற்காக பல்வேறு முயற்சிகளை தீயணைப்பு துறையினர் மேற்கொண்டு வந்த போதிலும் தீ மேலும் கொழுந்து விட்டு எரிகிறது.

# பதிவிறக்கப் பெட்டகம்

பெரியவர்கள் எல்லோரும் முதலில் குழந்தைகளாக இருந்தவர்கள் தாம். ஒருசிலருக்கு மட்டுமே அது நினைவிருக்கிறது.
**- அந்த்வாந்த் செந்த் எக்சுபரி**

கடுமையாக உழையுங்கள்... பணக்காரர்கள் எல்லாம் உங்களை நம்பித்தான் இருக்கிறார்கள்.
- யாரோ

ஏழைகளின் கோபத்திலிருந்து பணக்காரர்களைக் காப்பாற்றும் எளிய தந்திரத்தின் பெயர்தான் மதம்.
**- ஒஸ்கார் வைல்ட்**

எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை. ஆனால் அவரை நினைத்தால் பயமாகத்தானிருக்கிறது.
**-கப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ**

நரகத்தின் மிக மோசமான இடம், ஒரு பிரச்சினையின் போது வாயைத் திறக்காமல் மௌனமாக இருந்துவிடும் ஆட்களுக்குத்தான் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.
**- எம்.எல்.கிங்**

அழகானவை எல்லாம் சிறந்தவை என்று எண்ணுவதே மனிதகுலத்தின் ஆகப்பெரிய மாயை.
- ரோல்ஸ்ரோய்

சூரியனுக்குக் கீழே உள்ள பொருட்களிலே மிகவும் குழப்பமானதும் புரிந்துகொள்ள முடியாததுமான ஒரே விஷயம் உண்மை மட்டுமே.
**- ஹெர்மன் மெல்வில்**

அதிகாரத்திற்கு எதிரான மனிதனின் போராட்டம் என்பது ஞாபக மறதிக்கு எதிராக நினைவுகளின் போராட்டமே.
**- மிலன் குந்தேரா**

நான் என்னை விட்டு ஒழினால்தான் எனக்கு நிம்மதி.
**- புதுமைப்பித்தன்**

நான் என்பது எனக்குள் இல்லை. எனக்கு வெளியே இருக்கிறது.
**- ழாக் லக்கான்**

என் தனிமை ஒரு கிண்ணத்தில் இருக்கிறது; யாரேனும் பருக வருவார்கள் என.
**- தேவதச்சன்**

எதையாவது சார்ந்திரு. இல்லாவிடில் காணாமல் போய் விடுவாய்.
**- வண்ணநிலவன்**

தன் வாழ்வைத் தேடுபவன் அதை இழப்பான்.
**- யேசு கிறிஸ்து**

அது அதுவாகவும் இருக்கிறது; அது இல்லாமலும் இருக்கிறது.
**- பௌத்தம்**

யாருமில்லா வீட்டில் அடிக்கும் டெலிபோன் இருக்கிறதா.
**–மார்ட்டின் ஹைடெக்கர்**

மரணம் உன் விருப்பம் என்றால்... பின், கொலை செய்தல் மிக எளிதாகக் கைவந்துவிடுகிறது.
**- கமலாதாஸ்**

மரணம் துரதிர்ஷ்டவசமானது; இறந்தவருக்கு அல்ல, வாழ்பவருக்கு.
**- ழாக் தெரிதா**

யாரோ உறக்கம் விழித்து வருவதோ நம் பிறப்பு?
**- நாகார்ஜுனன்**

கண்ணுக்குக் கண் என்பது உலகைக் குருடாக்கி விடும்.
**- காந்தி**

மனிதன் அவனை ஆக்கிய சக்திகளால் கைவிடப்பட்ட மிருகம்.
**- சார்த்தர்**

இன்று மனிதனாக இருப்பதே குற்றம்.
**- சுகுமாரன்**

"நீ சொல்வது எனக்குப் புரியவில்லை" என்கிறான். அதற்கென்ன செய்வது, அவன் சொல்வது கூடத்தான் எனக்குப் புரியவில்லை.
**- நகுலன்**

காதல்தான் எத்தனை புத்துயிர்ப்பாகி அத்தனையையும் புதிதாக மாற்றிவிடுகிறது.
**- டெல்யூஸ் கத்தாரி**

ஒரே நிலவுதான் உலகில் உள்ள எல்லா குளங்களிலும் தனித்தனியாக மிதந்து கொண்டிருக்கிறது.
**- ஸென் மொழி**

அறிவு தனது விஷக் கொடுக்கைத் தனக்கெதிராகத் திருப்பியாக வேண்டும்.
**- நீட்சே**

# எகிப்து புரட்சியின் அடுத்த கட்டம்




எகிப்து மீண்டும் ஒரு குழப்பமான நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பது போலத் தெரிகிறது. ஹோஸனி முபாரக் தப்பி ஓடியதுமே வெற்றி கிடைத்ததாக முழங்கப்பட்டது. ஆனால், ராணுவ ஆட்சியாளர்கள் மக்களாட்சியைக் கொண்டு வருவதற்கு அவகாசம் கேட்டார்கள். அந்த அவகாசம் முடிவடையும் காலம் நெருங்கி விட்டது. இபபோது மீண்டும் போராட்டங்கள் தொடங்கியிருக்கின்றன. தாஹ்ரீர் சதுககத்தில் மீண்டும் மனிதத் தலைகள நிரம்பியிருக்கின்றன. கோஷங்கள் விண்ணை முட்டுகின்றன.

சொகுசு மருத்துவமனையில் ஹாயாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் ஹோஸ்னி முபாரக், அவரது இரு மகன்கள் உள்ளிட்டோர் மீதான நடவடிக் கைகளில் சுணக்கம் ஏன் என்று போராட்டக்காரர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். தேர்தலை நடத்துவதில் என்ன தயக்கம் என்று கேட்கிறார்கள்.

நாசர் காலத்து வரலாற்றுப் பாடத்தை இது நினைவூட்டுகிறது. இப்போது ராணுவ ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலைதான், அறுபது ஆண்டுகளுக்கு முன்பு பரம்பரை மன்னர் ஆட்சியை ஒழித்து விட்டு ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பை நடத்திய நாசருக்கும் ஏற்பட்டது. அவர் துணிச்சலாக முடிவெடுத்தார்.

தேர்தலை நடத்தினால் தம்மால் வெற்றி பெற முடியாது. ராணுவ ஆட்சியே தமது கனவுகளைச் செயற படுத்தும் ஒரே வழி என்று தீர்மானித்தார். அரசியல் கட்சிகளை ஒழித்தார், தேர்தல் கூடாதென்றார், அடிப்படை உரிமைகளை முடக்கினார். ஒரே நாளில் எகப்து ராணுவ ஆட்சியின் கீழ் வந்தது. சாகுமவரை நாசர் அதிபராக இருந்தார்.

இப்போதைய ராணுவ ஆட்சியாளர்கள் நாசரைப் போன்று தடாலடியான முடிவெடுக்கக்கூடியவர்கள் அல்லர். ஏற்கெனவே முடிவெடுத்தபடி இன்னும் ஓரிரண்டு மாதங்களில் தேர்தலை நடத்திவிடுவார்கள் என்றுதான் தோன்றுகிறது. ஆனால், இந்தத் தேர்தல் மக்களாட்சி கோரி, போராட்டம் நடத்திய எல்லோருக்கும் மகிழ்ச்சியளிககக் கூடியதாக இருக்குமா என்பது சந்தேகமே.

மக்களாட்சி என்பதே 49 சதவீதம் பேரின் உரிமையை 51 சதவீதம் பேர் பறிப்பதுதான் என்பார் அமெரிக்காவின் தேசத் தந்தைகளுள் ஒருவரான தோமஸ் ஜெபர்சன். அந்த வகையில், போராட்டம் நடத்திய அனைவருமே தங்களுக்கு ஆதரவான அரசு அமையும் என்று எதிர்பார்க்கக்கூடாது தான். ஆனால், போராட்டத்தை முன்னின்று நடத்திய எல்பரடே போன்றவர்களின் விருப்பத்துக்கு எதிரான அரசுதான் அமையக்கூடும் என்பது கொஞ்சம் நெருடலானது. ஜனாதிபதி ஆவார் என்று கருதப்பட்ட எல்பரடேக்கு அந்த வாய்ப்பும் கிடைக்கும் என்று தோன்றவில்லை.

அண்மையில் அல்-ஜசீரா நடத்திய கருத்துக் கணிப்பின்படி, இப்போதைய சூழலில் தேர்தல் நடந்தால் 'பிரதர்ஹுட்' அமைப்பின் சுதந்திர மற்றும் நீதிக் கட்சிக்கு 50 சதவீத வாக்குகள் கிடைக்கும் என்று தெரியவந்திருக்கிறது. சல.்.பி கட்சிக்கு 27 சதவீத இடங்கள் கிடைக்கலாம் என்றும் அல்-ஜசீரா கணித்திருக்கிறது. பெண்களுக்கு வாக்குரிமை இல்லை, வாக்குரிமை பெற்ற 34 சதவீதம் பேர் படிப்பறிவற்றவர்கள் என்பதெல்லாம் இவர்களுக்குச் சாதகம் என்று கூறப் படுகிறது. பொதுவான கருத்துப்படி, இரண்டுமே பழமைவாதக் கட்சிகள்தான் என்பதால், கூட்டணி ஆட்சி அமைப்பதில் சிக்கல் இருக்காது. எந்த வகையில் பார்த்தாலும் தேர்தல் நடந்தால், எகிப்தில் அமையப்போவது பழமைவாத அமைப்புகளின் ஆட்சிதான்.

இது மதச்சார்பற்ற இயக்கங்களுக்கு கசப்பான சேதி. மக்களாட்சி வேண்டும் என்று போராட்டம் நடத்திய அவர்கள், பழமைவாத அமைப்புகளின் கையில் ஆட்சிப் பொறுப்பு செல்வதை விரும்பவேயில்லை. இப்படியொரு நிலை ஏற்பட்டால், ஹோஸ்னி முபாரக்கே ஆட்சி செய்துவிட்டுப் போயிருக்கலாம் என்றுகூட அவர்கள் நினைப்பார்கள் என்றுதான் தோன்றுகிறது.

இப்போது தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று தாஹ்ரீர் சதுககத்தை முற்றுகையிட்டிருப்போரில், மதச்சார்பற்ற இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரையும் காணமுடியவில்லை என்று செய்திகள் கூறுகின்றன.

சல.்.பி, நீதிக்கட்சியினர்தான் போராட்டத்தை நடத்துகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த அளவுக்குத் தேர்தலுக்குப் பிந்தைய நிகழ்வுகளை நினைத்து மதச்சார்பற்ற இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் இப்போதே அஞ்சத் தொடங்கிவிட்டார்கள் போலும்.

அவர்களது அச்சம் ஒருபுறம் இருக்கட்டும். எகிப்தில் அறிவிக்கப்பட்டபடி தேர்தல் நடந்தால் வேறு மாதிரியான அடையாளச் சிக்கல் ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது.

நான்காண்டுகளுக்கு முன்பு இதே போன்றதொரு தேர்தல் பாலஸ்தீனத்திலும் நடந்தது. பயங்கரவாதிகள் என்று மேற்கத்திய அரசுகளால் முத்திரை குத்தப்பட்ட 'ஹமாஸ்' இயககம் அந்தத் தேர்தலில் பெரும்பானமை இடங்களில் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியை எதிர்பாராத இஸ்ரேலும், அமெரிக்கா போன்ற நாடுகளும் பாலஸ்தீனத்தை தீண்டத்தகாத நாடாகப் பார்க்கத் தொடங்கின. ஹமாஸ் இல்லாத பாலஸ்தீனத்துடன்தான் பேச்சு என்கிற சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைத்தன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு புறக்கணிக்கப்பட்டது. ஜனநாயகத்தைக் கட்டிக்காப்பதாகக் கூறிக் கொள்ளும் மேற்கத்திய நாடுகளெல்லாம் சேர்ந்து மக்களாட்சியைத் தோற்கடித்தன. இது பாலஸ்தீனப் பிரச்னையை மேலும் சிக்கலாக்கியது. 1990 களின் தொடக்கத்தில் அல் ஜீரியாவிலும் இதுபோன்றே மேற்கத்திய நாடுகளால் மக்களாட்சி முடக்கப்பட்டது.

கிட்டத்தட்ட இதே நிலைதான் எகிப்திலும். அடிப்படைவாத அமைப்புகளாகக் கருதப்படும் பிரதர்ஹுட்டும், சல.்.பியும் ஆட்சியமைத்தால், அந்த அரசுக்கு நிச்சயமாக மேற்கத்திய ஆதரவு கிடைக்காது. உள்ளூர் 'மதச்சார்பற்ற' அமைப்புகளின் ஆதரவும் இருக்காது. ஈரான், வட கொரியா மாதிரியான தேசமாகப் பார்க்கப்படும் நிலையும் ஏற்படலாம்.



எது எப்படியோ, மக்களாட்சிக்கு வருவது என்பது தீர்மானித்தாகி விட்டது. முடிவு எப்படியிருந்தாலும் உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இன்னொரு சவூதி அரேபியாவோ, துருக்கியோ, இந்தோனேியாவோ உருவாவதில் தவறில்லை. ஆனால், அல்ஜீரியாவோ, பாலஸ்தீனமோ வேண்டாம்.

இப்போது மக்களாட்சி வேண்டும் என்று கோரும் பிரதர்ஹுட் அமைப்பு 60 ஆண்டுகளுக்கு முன்பு இதே எகிப்தில் தேர்தலை ரத்துச் செய்ய நாசருக்கு உதவியது. மேற்கத்திய நாடுகள் அல்ஜீரியாவிலும், பாலஸ்தீனத்திலும் இதைச் செய்தன. இன்னொரு முறை அதுபோன்ற வரலாற்றுப் பிழையைச் செய்தால் மக்களாட்சியின் காவலர்கள் என்று கூறிக் கொள்வதில் அர்த்தமேயில்லை.

- எம்.மணிகண்டன்

# மின்சாரம், மின்சாரம்



சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் பெறும் முறையில் மரபுசார்ந்த முறைகளை விடக் கொஞ்சம் செலவு கூடுதலாகும். பிற பிரச்சினைகளும் உண்டு. அதில் ஒரு பிரச்சினைக்கு தற்போது தீர்வு கிடைக்கும் அறிகுறிகள் தோன்றயிருக்கின்றன. சூரிய ஒளி ஆற்றலை சேமிக்கும் கருவி ஒன்றை உருவாக்குவதில் விஞ்ஞானிகள் குறிப்பிடத் தகுந்த வெற்றியை அடைந்துள்ளனர். குறைந்த அளவு இழப்புடன் மின்சாரத்தை சேமிக்கமுடிவதும் ஒரு சிறப்பு. ஆராய்ச்சி நிலையில் உள்ள இந்த கருவி புழக்கத்திற்கு வர இன்னும் அதிக காலமாகலாம். இக்கருவி வெகுஜன உபயோகத்திற்கு வரும் பட்சத்தில் மின்சாரத்தை சேமித்து வைத்துக் கொண்டு தேவையான நேரத்தில் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். பல மணி நேர தொடர் மின்வெட்டுக்கள் பற்றி கவலை குறையலாம்.

சிறிய அளவிலான இம்முயற்சியைப் போல், பெரு அளவிலும் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. மின்சார உற்பத்தி நிலையங்கள் மக்கள் வாழ்விடங்களிலிருந்து மிகத் தொலைவில் உள்ளதால், மின்சாரம் கம்பிகள் மூலம் கடத்தப்படுகின்றன. இந்த முயற்சியில் அதிக மின் இழப்பு நேர்கிறது. இந்த இழப்பை குறைக்க பல ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. பெரும்பாலான ஆராய்ச்சிகள் தோல்வியில் முடிகின்றன. ஆனால் ஒரு ஆராய்ச்சி குறிப்பிடத்தகுந்த வெற்றி பெற்றிருக்கிறது. மேலதிக தகவல் இங்கே :

http://www.gizmag.com/armchair-quantum-wire-breakthrough/19232/

# மனித இனத்தின் புதிய மூதாதை



Home Erectus என்றழைக்கப்படும் நம் மூதாதைகள் குறித்த போதுமான தரவுகள் நம்மிடம் உள்ளன. Home Erectus-க்கும் மூதாதையர்களை "Lucy" என்று அழைக்கிறார்கள். இருவருக்குமிடையேயான தொடர்ச்சி குறித்த ஆராய்ச்சிகள் இன்னமும் நடைபெற்று கொண்டுதான் இருக்கின்றன. மனித குலத்தின் தோற்றம் முதன் முதலில் உருவானதாக நம்பப்படும் ஆபிரிக்காவில் இந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சமீபத்தில் மேலே சொன்ன இரு உயிரினங்களுக்கும் இடைப்பட்ட ஒரு உயிரினத்தின் எலும்பு சிதிலங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஆயடயிய என்ற இடத்தில் கிடைத்துள்ள இந்த சிதிலங்கள் உண்மையிலேயே ஒரு முக்கியமான கண்டுபிடிப்பாக ஆரா்ய்ச்சியாளர்கள் ஏீற்றுக் கொண்டுள்ளனர். இந்தக் கட்டுரையில் நமக்கு மேலும் பல தகவல்கள் கிடைக்கின்றன.

http://ngm.nationalgeographic.com/2011/08/malapa-fossils/fischman-text

# சூழலை பாதிக்காத நிலக்கரி தொழில்நுட்பம்



நிலத்தடியிலிருந்து நிலக்கரியை வெளியே எடுத்து, அதிலிருந்து நமக்குத் தேவையான சக்தியைப் பெறுவது இலாபகரமானதாக கருதப்பட்டாலும், அதன உடன்விளைவுகள் அதிகம். குறிப்பாக இந்த பணியை மேற் கொள்ளும் போது சுற்றுச்சூழலுக்கு நேரும் கேடு அதிகம். சுற்றுச்சூழல் மாசு குறித்த குரல்கள் தற்போது அதிகம் கேட்கத்துவங்கியுள்ள காலகட்டத்தில் இத்தகைய பணியை மேற்கொள்வதில் உள்ள சிக்கலை சந்திக்க உலக நாடுகளின் அரசுகள் தயங்குகின்றன. ஆனால் ஐரோப்பிய நிறுவனம் ஒன்றின் தொழில்நுட்பம் இந்த தடைகளைகளைய உதவும் என்று தோன்றுகிறது. நிலக்கரியை அது நிலத்தடியில் இருக்கும் போதே அதிலிருந்து நமக்குத் தேவையான சக்தியைப் பெறமுடியும். இதனால் சுற்றுசசூழல் பாதிப்படையாது. மேலும், சுரங்கத் தொழிலில் ஈடுபடும் பல்வேறு மனித உயிர்களுக்கும் சேதமில்லை. சீனா இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்த துவங்கியுள்ளது. சீனாவில் இந்தத் தொழில்நுட்பம் வெற்றியடையும் பட்சத்தில் உலக நாடுகளும் இதே வழியில் செல்ல முயலும் என்று எதிர்பார்க்கலாம். இது குறித்த மேலதிக தகவல் இங்கே - http://www.technologyreview.com/energy/37999/?p1=MstRcnt

# 70 ஆயிரம் செவிப்புலனற்றோர் கவனிப்பாரற்ற நிலையில்

(கொழும்பு)

இலங்கையில் மாற்று வலுவுள்ளவர்களில் செவிப்புலனற்றவர்கள் பல்வேறு சமூக, பொருளாதார உளவியல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வு காண்பதுடன், அவர்களின் அடிப்படை உரிமைகளையும் உத்தரவாதப்படுத்த வேண்டும் எனவும் கோரி ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை அமைதிப் பேரணி ஒன்றை நடத்தியிருக்கின்றார்கள்.

இலங்கை செவிப்புலன் குறைந்தோருக்கான மத்திய சம்மேளனம் என்ற அமைப்பு இதற்கான அழைப்பை விடுத்திருந்தது. பேரணியின் முடிவில் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் செவிப்புலனற்றவர்கள் அல்லது கேட்கும் சக்தியை இழந்தவர்கள் சுமார் 70 ஆயிரம் பேர் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

அலுவலகங்களிலும், கல்விக் கூடங்களிலும் செவிப்புலனற்றவர்களுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படுவதில்லை என வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் வி.சுப்பிரமணியம் கூறுகின்றார்.

இலங்கை சமூக சேவைகள் அமைச்சின் அங்கவீனமுற்றவர்களுக்கான தேசிய சபையின் உறுப்பினராகவும், வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் விசேட கல்வி பிரிவின் ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றி வருகின்ற இவர், செவிப்புலனற்றவர்கள் சமூகத்தில் தொடர்பாடலில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாகக் கூறுகின்றார்.

செவிப்புலனற்றவர்களுக்கான கேட்டல் கருவிகளைப் பெற்றுக் கொள்வதிலும் போதிய வாய்ப்புகள் இல்லை என்பதுடன், இந்தக் கருவிகளைப் பயன்படுத்துபவர்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரமும் இலங்கையில் வழங்கப்படுவதில்லை என்றும் வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

# கீரை விற்பனைக்கு இடம் கிடைக்குமா?

(கரணவாய்)

நெல்லியடி பொதுச்சந்தையில் கீரை வகைகளை விற்பனை செய்வதற்கு உரிய இடம் ஒதுக்கப்படாமையால் தாம் சிரமத்தின் மத்தியில் விற்பனை செயவதாக வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பொதுச்சந்தை திறக்கப்பட்டு 10 நாட்கள் கடந்துள்ள நிலையில் கீரை வகைகளை விற்பனை செய்யும் வியாபாரிகள் கூடாரங்கள் இன்றி நுகர்வோர் நடமாடும் இடத்திலும் குறிப்பாக சுத்தமற்ற இடத்தில் சிரமத்துடன் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக பிரதேச சபை நடவடிக்கை எடுத்து செயற்படவேண்டும் என வியாபாரிகள் கேட்டுக்கொள்கின்றனர். (18)

# விரலில் மை பூசுவது வாக்காளருக்கு அவமானம்

(கொழும்பு)



வாக்காளர்களின் விரலில் மைபூசுவது அவர்களை அவமானத்துக்கு உள்ளாக்கும் செயல். காலம் கடந்துபோன இந்தச் சட்டத்தை தேர்தல் சட்டப் புத்தகத்தில் இருந்து நீக்கிவிட வேண்டியுள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

1970 ஆம் ஆண்டில் இருந்தே இந்தச் சட்டவிதி நீக்கிவிடப்பட வேண்டியுள்ளது. இதனைப் பதவிகளிலிருந்த தேர்தல்கள் ஆணையாளர்கள் சுட்டிக்காட்டியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

செல்லுபடியாகும் அடையாள அட்டை ஒன்று முன்வைக்கப்படுவதால் மாத்திரமே வாக்களிக்க அனுமதி கிடைக்கிறது. இதற்கும் மேலதிகமாக விரலில் மைபூசும் முறைமை தற்காலத்துக்குப் பொருந்தாததொரு சட்ட விதியே எனவும் தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவிலிருந்து பயிர் விதைகள்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து ஒரு இலட்சத்து 85 ஆயிரம் கிலோ கிராம் பயிர் விதைகளை இறக்கு மதி செய்வதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் கே.ஏ. கருணாதிலக தெரிவித்தார்.

இதன் கீழ் 50 ஆயிரம் கிலோ கிராம் பயிர் விதைகள், 75 ஆயிரம் கிலோகிராம் மரமுந்திரிகை விதைகள், 50 ஆயிரம் கிலோ கிராம் உழுந்து விதைகள் மற்றும் 10 ஆயிரம் கிலோகிராம் கௌபி விதைகள் என்பன இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இப் பயிர் விதைகள் அடுத்த மாதமளவில் கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளதாக செயலாளர் கே.ஏ. கருணாதிலக மேலும் தெரிவித்தார்.

# எம்.பிக்களின் எண்ணிக்கை குறைப்பு கண்டிக்கிறது ஐ.தே.கட்சி

(கொழும்பு)

யாழ். மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்து அதைக்கொண்டு சிங்களப் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது ஜனநாயகத்துக்கு எதிரானதும், அநீதியானதுமாகும் என ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை மூலம், பகிரங்கமாகவே தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் சிங்கள மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அரச நிர்வாகத்தில் இந்த நாட்டு தமிழ் மக்களை மேலும் ஒதுக்கும் சிங்களவர்களின் முடிவாகவே அவர்கள் அதை அர்த்தப்படுத்துவார்கள்.

சுதந்திரத்தின் பின்னர் காலம் முழுவதும் இந்தக் குற்றச்சாட்டு தமிழ் அரசியல்வாதிகளால் மட்டுமல்லாமல் ஜனநாயக உரிமைகளுக்காகப் பேசுபவர்களாலும் அரசின் மீது சுமத்தப்பட்டு வந்துள்ளது.

இந்த விடயத்துக்காக நிலையான அரசியல் தீர்வு இல்லாமல், யாழ். தமிழ் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இவ்வாறு குறைப்பது அநீதியானதும் ஜனநாயக விரோதமானதுமான செயல் என்றே ஐ.தே.க. எண்ணுகிறது என்றும் அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினரால் யாழ். மாவட்டத்தில் வசிக்கின்ற வேலையற்ற இளைஞர், யுவதிகளின் சுயதொழிலை மேம்படுத்தும் நோக்குடன் ஒவ்வொருவருக்கும் தலா இரண்டரை இலட்சம் ரூபா வீதம் வங்கிகளினூடாக கடன் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் அண்மையில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பின் ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்ட நிஸ்கோ பொது முகாமையாளர் பி.பஞ்சலிங்கம் உரையாற்றுவதையும், அருகில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் த.ஈஸ்வரராசாவையும், கலந்துகொண்ட பயனாளிகளையும் காணலாம்.

## நீதிமன்றம் செல்ல....

அவர்களின் எண்ணிக்கை மதிப்பீடு செய்யப்படாமல் இவ்வாறு குறைத்து மதிப்பீடு செய்வது அடிப்படையில் தவறாகும். ஏனெனில் இந்த மக்கள் இன்னும் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. அது மட்டுமல்லாது மீள்குடியாற்றம் செய்யப்பட வேண்டிய பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வெளிநாடுகளிலும் இந்தியாவிலும் இடம்பெயர்ந்தும் வாழ்கின்றனர்.

2 இலட்சம் மக்கள் இன்னும் தங்களது சொந்த ஊர்களில் குடியேறாமல் இருக்கின்றனர். ஆகவே இந்த வாக்காளர் மதிப்பீடு தொடர்பாக சட்ட வல்லுனர்களுடன் நாம் ஆலோசனைகள் நடத்தி வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## பதவிப் போட்டியில்....

திகதியிட்டு வல்வெட்டித்துறை நகர சபைத் தேர்தல் - 2011 எனத் தலைப்பிட்டு, வல்வெட்டித்துறை நலன்விரும்பிகள் என சிவாஜிலிங்கத்தின் தலைமையில் 11 பேர் ஒப்பமிட்டு, வல்வெட்டித் துறையில் இருந்து தொலைநகல் மூலம் இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

1. முன்னுரிமை வாக்கின் அடிப்படையில் உறுப்பினர்கள் தெரிவு மட்டுமே அன்றி தலைவர், உபதலைவர் தெரிவுக்கு அல்ல என்பதை சுட்டிக்காட்டுகின்றோம்.

2. நியமனப்பத்திரம் தயாரித்த வேளை 26.01.2011 இல் சுமந்திரன் (பா.உ) முன்னிலையில் தங்கள் அனந்தராஜாவின் கேள்விக்கு பதிலளிக்கையில் முன்னுரிமை வாக்குகளை மட்டும் கருத்தில் கொள்ளாது வேறு பல அம்சங்களும் சேர்த்தே பரிசீலிக்கப்படும் எனப் பதிலளித்தமையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

3. இந்நிலையில் ந. அனந்தராஜ் உள்ளிட்ட எமது உறுப்பினர்கள் மத்தியில் சுழற்சி முறையில் தலைவர், உப தலைவர் பதவிகள் பகிர்ந்து வகிக்கும் திட்டத்தினை அமுல்படுத்த ஒரு மனதாக தீர்மானித்துள்ளோம்.

4. இதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 உறுப்பினர்களும் போட்டியிட்ட வேட்பாளர்களும் மற்றும் வல்வெட்டித்துறை நலன் விரும்பிகளும் ஒருமித்த கருத்துடன் சிவாஜிலிங்கம் முதல் ஒரு ஆண்டும் அனந்தராஜ் அடுத்த இரு ஆண்டுகளும் குலநாயகம் ஒரு ஆண்டும் தலைவர் பதவியை வகிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது என்று மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## பொலிஸ்...

செல்லவோ கூடாது. பாடசாலை விட்டபின்னர் வேறு இடங்களுக்குச் செல்லாது நேரடியாக வீட்டுக்குச் செல்ல வேண்டும். சமூக சீரழிவிற்கு இடமளிக்கக்கூடாது.

மாணவர்கள் மத்தியில் நல்ல பழக்க வழக்கங்களை ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும். மாணவர்கள் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் நல்ல மாணவ சமூகத்தை உருவாக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சில்வா, கிளிநொச்சி பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பாடல் பொலிஸ் அதிகாரி ஆப்ரீன் மற்றும் பாடசாலை சமூகத்தினர், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (77)

## கடன் பெற...

நடைபெறவுள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கு தற்போது அதிகமான கடன் கொடுக்கும் நாடுகளின் வரிசையில் சீனா முதலிடத்திலும், ஜப்பான் இரண்டாமிடத்திலும், உலக வங்கி, மூன்றாமிடத்திலும், ஆசிய அபிவிருத்தி வங்கி நான்காமிடத்திலும், ஐ.நா. முகவர் அமைப்புக்கள் ஐந்தாமிடத்திலும் உள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.


## சனல் - 4 போலி.....

இடம்பெற்ற மேற்படி ஆர்ப்பாட்டத்தின்போது சனல் - 4 ஆவணப் படத்தை அவுஸ்திரேலியாவில் ஒளிபரப்பியமைக்கு கண்டனம் தெரிவித்தும், போலித்தனமான காணொளிக் காட்சிகளால் இலங்கையின் கீர்த்திக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகக் கூறியும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டிருக்கிறது.

இதில் நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் கலந்துகொண்டதாக இந்த ஆர்ப்பாட்டத்தின் ஒழுங்கமைப்பாளர் ஒசன் அபயவர்த்தன தெரிவித்தார்.

செய்திப்பாணம்

**இலங்கைத் தமிழர்களின் இலக்கே அவுஸ்ரேலியா**
**புலம்பெயர் நிலைமை புவிதனிலே - அலங்கோலம்**
**யுத்தம் முடிந்தபின் யதார்த்தமே வேறாயினும்**
**புத்தியே பேதலிச்சுப் போச்சு!**



# குகநாதனுக்கு தொடர்ந்தும் தீவிர மருத்துவக் கண்காணிப்பு

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்கு இலக்கான உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் தொர்ந்தும் யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவரைப் பரிசோதித்த மருத்துவர், இவரது நிலை தீவிரமாக மருத்துவர்களால் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், இவருக்கு ஏற்கனவே ஆஸ்த்துமா, நீரிழிவு போன்ற நோய்களின் தாக்கம் இருப்பதாகவும் இவரது பின் தலைப்பகுதி தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதனால் அவரது தலைப்பகுதியின் உட்புறமாக இரத்தக் கசிவு ஏற்பட்டிருக்கின்றதா என்பது குறித்தும் அவரது இதய அழுத்தம் மற்றும் ஏனைய உடல் நிலையை மீளவும் பரிசீலிக்கப்பட வேண்டியிருப்பதாகவும் அதன் பிற்பாடே அவரது நிலை குறித்து கருத்துத் தெரிவிக்க முடியுமெனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முற்பகல் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்கவின் பணிப்பின் பேரில் இராணுவ அதிகாரி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்து தாக்குதலுக்குள்ளாக்கப்பட்ட உதயன் செய்தி ஆசிரியரைப் பார்வையிட்டதுடன், வைத்தியர்களிடமும் அவரது குடும் பத்தவர்களிடமும் சம்பவம் குறித்து கேட்டறிந்து கொண்டார். (பா)

# குற்றவாளிகள் 206 பேர் கைது

(கொழும்பு)

நுகேகொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 209 பேர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 6 மணி தொடக்கம் நேற்றுக் காலை 6 மணிவரையான 24 மணித்தியாலங்கள் நுகேகொடை பொலிஸ் வலயத்திற்குட்பட்ட அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் சோதனை நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள 100 பேர், குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 37 பேர், சந்தேகத்தின் பேரில் 14 பேர் மற்றும் வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 6 பேர் உள்ளடங்களாக 206 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று கங்கொடவில நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, போக்குவரத்து விதிமுறைகளை மீறியவர்களுக்கு எதிராக 406 வழக்குகள் பதிவு செய்யப்படவுள்ளதாக நுகேகொட பொலிஸார் குறிப்பிட்டனர்.

# யாழில் ஊடகவியலை மேம்படுத் துரித நடவடிக்கை எடுக்கப்படு




(கொக்காவில்)

வெகுஜன ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சினால் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான ஊடகச் செயலமர்வு அடுத்த மாதம் யாழ்.நகரில் நடைபெறும் இத்தகவலை அமைச்சின் செயலாளர் பீ. கணேகல கொக்காவிலில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்குரிய செயலமர்வின் போது சான்றிதழ்களை வழங்கும் வைபவத்தில் பேசியபோ பிட்டார்.

தகவல்துறை அமை காலத்தில் இவ்வாறான லமர்வுகளை நடத்தும் காண ஊடகவியலாளர்கள் ளுடைய ஒத்துழைப்பினை வேண்டும் எனவும் கே கொண்டார்.

ஒரு நாள் செயல தெளிவுபடுத்தப்படும் விட ஊடகவியலாளர்களுக்கு பது போன்று உள்ளது. வாறான நிகழ்வுகள் இரு நடைபெறுவது வரவேற்கத் கது என செயலமர்வில் கல கொண்டவர்கள் கருத்து வித்திருந்தனர்

அதற்குப் பதிலளித்த லாளர், உங்கள் கருத்துக்கள் னத்தில் எடுத்துக் கொள்ளப் அமைச்சின் திட்டமிடல் பிரி தெரியப்படுத்தப்படும் எ அவர் மேலும் தெரிவித்தார்

# யாழில் கிராமங்கள் தோறும் சிவில் பாதுகாப்புக் குழுக்கள்

(அச்சுவேலி)

யாழ்.குடாநாட்டில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவு தோறும் சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பதன் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிராமசேவகர், பிராந்திய பொலிஸ் நிலையப் பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராமப் பெரியார்கள், மதகுருமார்கள், பொது அமைப்புப் பிரதிநிதிகள் எனப் பலரையும் உள்ளடக்கியதாக அமைக்கப்படும் இச் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு ஏதுவான இனக்கப்பாடுகளை எட்டுவதற்கும் மக்கள் நலன் தொடர்பான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதிலும் பொதுமக்களுக்கு உதவியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

# தமிழ் இணையத்தின் பணம் முடக்கம்

(சுவீடன்)

சுவீடன் நாட்டில் இருந்து இயங்கும் இணையத்தளம் ஒன்றுக்கு சொந்தமான வங்கிக் க்ணக்கு சுவீடன் சட்டத்துறையால் முடக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் பலருக்கு எதிராக குறித்த இணையத்தளம் அவதூறான செய்திகளை ஆதாரமின்றி தொடர்ந்து வெளியிட்டு வந்ததுள்ள நிலையிலேயே இந் நடவடிக்கை சுவீடன் சட்டத்துறையால் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த இணையத்தளத்தின் மீது பலர் சட்ட நடவடிக்கை எடுத்திருந்த நிலையில் அந்த இணையத்தளத்தின் வங்கி கணக்கை பரிசோதித்த சுவீடன் பொலிசார் இதன்போது அந்த வங்கி கணக்கில் இருந்து சுமார் ரூபா 5 மில்லியன் இலங்கைப் பணத்தை பறிமுதல் செய்துள்ளனர்.

குறித்த பணம் ஆசிய நாட்டு உளவுத்துறை ஒன்றினால் அந்த இணையத்தை நடத்துவதற்கும் பல தமிழர்களை அவ்விணையம் மூலம் புலிகள் என்ற முத்திரை குத்துவதற்கும் கொடுக்கபட்டதாக சந்தேகிக்கபடுகின்றது.

# பிராந்திய நாடுகளுட வர்த்தக நடவடிக்

பிராந்திய நாடுகளான ப ளாதேஷ், மியன்மார், மலேசி மற்றும் வடகொரியா அ யவற்றுடன் புதிய வர்த்தக துழைப்பு நடவடிக்கைக இலங்கை ஆரம்பிக்கவுள்ள அமைச்சர் ராஜித சேனா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று பெற்ற நீர் வாழ் உயிர தொடர்பான ஆசிய பிரா செயலமர்வு குறித்து தெ படுத்தும் செய்தியாளர் ச பில் கலந்து கொண்டு உரை றும் போதே அவர் இத தெரிவித்தார்.

# அடி காயங்களுட இளம் பெண் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வீதியில் தாக்கப்பட்டு நினைவிழந்து கிடந்த பெண்ணைப் பொலிஸார் வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

நடுவீதியில் தாக்குதலுக்கு உள்ளாகிய பெண் ஒருவர் தலையில் பலத்த காயத்துக்கு உள்ளாகி நடுவீதியில் அறிவு நினைவில்லாமல் நீண்டநேரம் மயங்கிய நிலையில் கிடந்ததாகவும் சம்பவத்தை அறிந்து அந்த இடத்திற்கு வந்த பொலிஸார் படுகாயமடைந்த பெண்ணை யாழ். போதனா வைத்தியசாலை யில் அனுமதித்தாகவும் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த திங்கட்கிழமை இரவு 7.00 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் சிற்றி விடுதிக்கு பாக நடந்த இச்சம்பவத் காயத்துக்குட்பட்ட பெ வரே ஆரியகுளம் சந்திப் யில் போக்குவரத்துக் கடமை இருந்த பொலிஸாரால் மீ பட்டு சிகிச்சைக்காக மருத் மனையில் அனுமதிக்கப்பட்

மல்லாகம் மற்றும் ய நகரத்தின் கரையோரப் யில் இருந்து இடம்பெய புகையிரத குட்சைட் பகு வசிக்கும் இரு கோஷ்டி கிடையேயான வாய்த்தா கைகலப்பாக மாறி அடிதடி முடிந்ததுடன், இச்சம்பவ லேயே இப்பெண் காயம தாகவும் தெரிவிக்கப்படுகி

# தலைமைப் பதவிக்குப் போட்டி பிளவுறும் நிலையில் ஐ.தே.கட்சி



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாட்டில் இல்லாத சமயத்தில் கட்சித் தலைமைத்துவத்திற்கு கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜயசூரியவை கொண்டுவர மேற்கொள்ளப்பட்ட முயற்சியால் கட்சிக்குள் ஏற்பட்டிருந்த பிளவு மேலும் உக்கிரமடைந்து கட்சி இரண்டாக பிரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் கடந்த வாரம் நடப்பதற்கு முன்னரே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் லண்டன் பயணமானார். இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு கட்சியின் பிரதித் தலைவர்களில் ஒருவரான சஜித் பிரேமதாஸ அடங்கலான மாற்றுக் குழுவினர் மற்றொரு பிரதித்தலைவரான கரு ஜயசூரியவைக் கோரினர்.

இதன்படி, கட்சித் தலைமைப் பதவியை ஏற்கத் தயார் என கரு ஜயசூரியவும் விருப்பம் தெரிவித்தார். கட்சி ஒப்படைக்கும் எந்த சவாலையும் தான் ஏற்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

கட்சித் தலைமைத்துவத்தைக் கைப்பற்ற முயற்சி செய்து தோலவியடைந்துள்ள சஜித் பிரேமதாஸ திடீரெனத் தனது நிலைப்பாட்டை மாற்றி கரு ஜயசூரியவை தலைமைப் பதவிக்கு கொண்டு வர முயற்சி எடுத்துள்ளார்.

இந்த திடீர் திருப்பத்தினால் தனது தலைமைத்துவத்திற்கு ஆபத்து ஏற்படும் என்று பயந்துள்ள ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கரு ஜயசூரியவைச் சமாளிக்கும் வகையில் லண்டனில் இருந்து நேற்று முன்தினம் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவுகளையும் முரண்பாடுகளையும் தவிர்த்து, கட்சியை ஒரே தலைமைத்துவத்தில் செயற்படுவதற்கான அதிகாரங்களை கருஜயசூரியவுக்கு வழங்குவதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



யாழ்.றோட்டறிக் கழகத்தின் அனுசரணையில் உதயன் விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெ "இலக்கியக் குவியத்தின்" அங்குராப்பண நிகழ்வின்போது, யாழ்.கனகரத்தினம் மகா வித்திய யத்தின் அதிபர் வே.ஞானகாந்தன் உரையாற்றுவதையும், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை காணலாம். (படம் : சுமி

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்ட